
# கர்பலா

## தாங்கொணாத் துயரம்



தமிழில்:
அஷ்-ஷெய்க் அப்துல் ஹகீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

# கர்பலா

## தாங்கொணாத் துயரம்

அறபு மொழி மூலம் :

அஸ்-ஸெய்யித் முஹம்மத் காழிம் அல்-கஸ்வீனி

தமிழில் :

அஷ்-ஷெய்க் அப்துல் ஹலீம்

வெளியீடு :

ஷிபா பதிப்பகம்
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Name of the Book : Karbala Thankonaath Thuyaram

Author (Arabic) : As-Seyyid Muhammed Kazim
Al-Qasveeni

Translated by : Ash-Sheik Abdul Haleem
T.P. 071-5851084
E-mail: RAMFA14@GMAIL.COM

Published by : Shifa Publications
29/51 Chapel Lane
Colombo - 2
Sri Lanka

First Edition : December 2011

Printed by : AJ Printers
44, Station Road
Dehiwala

ISBN : 978-955-1289-03-4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நு
ழை
வா
யி
லி
ல்....

முஹர்ரம் இஸ்லாமிய புது வருடத்தின் முதல் மாதமாகக் கொள்ளப்படுகின்றது. சூரியன், சந்திரன், நட்சத்திரங்களை அடிப்படையாகவும், அதன் சுழற்சி, ஆரம்பம், நடு, இறுதியை வைத்து காலம் கணிக்கப் பட்டு வருகின்றது. இன்று உலகெங்கும் பொதுவாக ஆங்கிலேய (ஜனவரி) மாதத்தையே வருடத்தின் முதல் மாதமாகக் கருதி தமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆங்கிலேய வருடத் துடன் சந்திர, சூரிய வருடத்தையும் சேர்த்து கணிக்கப்பட்டு வருகின்றது.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை தமது மத ஆசாரங்களை நிறைவேற்றவும், கணிப்பிடவும் இஸ்லாமிய மாதத்தையே பயன்படுத் துகின்றனர். குறிப்பாக நோன்பு, ஹஜ் போன்ற கிரியைகள் இதன் அடிப்படையிலேயே கணிப்பிட்டு நிறைவேற்றப்படுகின்றன. இஸ்லாமிய வரலாற்றில் நிகழ்ந்த பல விடயங்களில் பெருமானார் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் பயணம் முக்கிய திருப்பு முனையாகும். ஆனால், இது முஹர்ரம் மாதத்தில் நிகழ்ந்ததா? அல்லது றபீஉல் அவ்வலில் இடம்பெற்றதா? என்பது அறிஞர்களால் ஆராயப்பட்டு தெளிவுபடுத்தப்பட வேண்டியதாகும்.

இஸ்லாமிய கணிப்பீட்டின்படி முஹர்ரம் மாதத்தில் 10ம் நாள் நிகழ்ந்த மிக முக்கிய நிகழ்வான துயரமிகு கர்பலா நிகழ்வு வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. நபி (ஸல்) அவர்களின் அன்பிற்கும், அஹ்லுல் பைத்தின் முக்கிய அங்கமாம், மா நபியின் மகளாம், மாதர் குல மாணிக்கம் ஹஸ்ரத் பாத்திமா அவர்களின் மைந்தர் இமாம் ஹுசைன் அவர்கள் உண்மை, நீதி, நியாயம் என்பனவற்றையும் இஸ்லாமிய விழுமியங்கள் மற்றும் மனித நேயங்களையும் வேண்டி தமது குடும்பம், நண்பர், உற்றார் உறவினர்களுடன் மதீனாவிலிருந்து மக்காவுக்கும், அங்கிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக்கின் கர்பலாவை நோக்கியும் பயணித்த நிகழ்வு முழு மனித குலத்தையே சிந்திக்கவும், அனுதாப அலைகளை எழுப்பவும் செய்துவிட்டது.

இமாம் ஹுசைன் வாழ்ந்த காலகட்டத்தில் எஸீத் இப்னு முஆவியாவினால் முஸ்லிம் உம்மத்தின் தலைமைப் பொறுப்பை தன் கைவசப்படுத்திக்கொண்டு மேற்கொண்ட அசிங்கமான விடயங்களை வரலாறு மிகத் தெளிவாக கோடிட்டுக்காட்டுகிறது. தூய குடும்பத்தில், ஆத்மீக சூழலில், வஹியின் வீட்டில் பிறந்து வளர்ந்த மனிதப்புனிதர், சிறப்பாலும் குணத்தாலும் பிறப்பாலும் உயர்ந்து நின்ற இமாம் ஹுசைன் (அலை) அவர்கள், தம்மிடமிருந்த அனைத்து உடமைகள், உயிர்கள் என்பனவற்றை இறைவனுக்காக அர்ப்பணித்து தம் உயிரை துச்சமாக மதித்து தீன் கொடி ஏற்றிவைத்த மாதமே புனித முஹர்ரம் 10ம் நாள் (ஆஷூரா) தினமாகும்.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் இறுதிவரையான நிகழ்வுகளை ஓரளவு சுருக்கமாக இந்நூல் சித்தரித்துக் காட்டுகின்றது. "பாஜியத் துத் தஃப்" எனும் நூலை அறபி மொழியில் ஆக்கியளித்தவர் அஸ்ஸெய்யித் முஹம்மது காழிம் அல்கஸ்வீனி அவர்களாவர். இவர்களின் பாரிய ஒரு நூலான "பாத்திமா மினல் மஹ்தி இலல்லஹ்த்" (பாத்திமா : கருவறை முதல் கல்லறை வரையில்) எனும் நூல் தொடர்பான அதிசய நிகழ்வுகள் இன்று பேசப்படுகின்றன. இவ்வகையில் தமிழ் கூறும் நல்லுலகிற்கு "கர்பலா தாங்கொணாத் துயரம்" எனும் நூல் ஒரு மைக்கல்லாக அமைய வேண்டுமென எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

இந்நூல் வெளிவர பல்வேறு வழிகளிலும் உதவிய அனைத்து தூய உள்ளங்களுக்கும் – குறிப்பாக, சகோதரர் அபூநஜாத், சகோதரர் ரிஸ்வி முஹம்மத் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

முஹர்ரம், பிறை 1, 1433 – அப்துல் ஹலீம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே....


| | |
|---|---|
| அசத்தியத்தின் ஆணையை மறுத்து... | 1 |
| தண்ணீர்! தண்ணீர்! கண்ணீர்!! | 6 |
| அறநெறி காக்கும் போர் - அறநெறி வழியிலேயே... | 14 |
| இதயக் கதவுகளைத் திறவுங்கள்! உண்மையை உணருங்கள்! | 18 |
| சொல்மழைக்குப் பிரதியாக அம்புமழை | 25 |
| இருளிலிருந்து ஒளியை நோக்கி... | 27 |
| தந்தை வழியில் தனயன் | 31 |
| அனுமதி கேட்டுக் களமிறங்கும் ஒழுக்கநெறி | 39 |
| மாநபியின் சாயலில் மாவீரர் | 47 |
| உடன்பிறப்புகளின் உன்னதப் போராட்டம் | 53 |
| வரண்ட நாவுகளுக்குத் தண்ணீர் மறுத்த ஈரமற்ற நெஞ்சங்கள் | 58 |
| பால்குடி மாறாப் பாலகனும் பலி! | 65 |
| தம்மை அறிமுகம் செய்யும் இமாம் | 68 |
| பெண்களிடம் பிரியாவிடை! | 72 |
| சத்திய சோதனையின் உச்சத்தில்... | 76 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானார் (ஸல்) அவர்களின்
பேரர்,
சுவனத்துத் தலைவி பாத்திமாவின்
இதயக்கனி,
அமீருல் முஃமினீன் அலீயின்
புதல்வர்,
இமாம் ஹஸனின்
சகோதரர்
மாவீரர் இமாம் ஹுஸைனின்
நிகரற்ற தியாகத்தை
நினைவிற்கொண்டு உள்ளம்
உருகி கண்ணீர் சிந்தும்
கோடானு கோடி நெஞ்சங்களுக்கு
இந்நூல் அர்ப்பணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்பலா துயரம்

## அசத்தியத்தின் ஆணையை மறுத்து....

பெருமானார் (ஸல்) அவர்களின் குடும்பத்தினர்களான புனித அஹ்லுல்பைத்தினர்களுக்கு நிகழ்ந்த கர்பலா துயரம் நீண்டகாலமாக, உள்ளங்களில் தாங்கொண்ணாத் துயரத்தையும் மறக்க முடியாத நிகழ்வுகளையும் ஏற்படுத்திவிட்டது. காலங்கள் பல கடந்தும் கண்மணி (ஸல்) அவர்களின் அஹ்லுல்பைத்தினர் மீதான கவலை புதுப்பிக்கப்பட்ட வண்ணமே உள்ளது. அவர்கள் மீது அன்பும் பாசமுங் கொண்டவர்கள் அத்துயர நிகழ்வை மறக்க முடியாதுள்ளனர்.

கர்பலா நிகழ்வு நடந்த நாட்களில் உமையாக் கூட்டத்தினராலும் அவர்களின் அடிவருடிகளினாலும் சுவர்க்கத்து வாலிபர்களின் தலைவர், றசூலுல்லாஹ்வின் பேரர் இமாமே ஷஹீத் அபீ அப்தில்லாஹ் அல்ஹுஸைன் (அலை) அவர்களுக்கு நிகழ்ந்த துயரங்களையும் சோகங்களையும் மறந்து அல்லது அவற்றைப் பொருட்படுத்தாது சில முஸ்லிம்கள் அந்நாட்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியாகவும் குதூகலமாகவும் நடந்து கொள்வதையும் விழாக்களையும் வைபவங்களையும் நடத்துவதையும் பார்க்கும் போது ஆதங்கமாகவே உள்ளது.

இமாம் ஹுஸைன் அவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் உண்மையான இஸ்லாமிய ஆட்சியை இந்த மண்ணில் நிலைநாட்டுவதற்காக மேற்கொண்ட முயற்சிகளை, "வேத வசனமோ இறை வாக்கியமோ வரவில்லை, ஹாஷிம்கள் ஆட்சிக்காகப் படும்பாடே அன்றி வேறெதுவுமில்லை" என நிராகரித்து, கொச்சைப்படுத்திய, நாஸ்திகவாத வசனங்களைப் பிரயோகித்த, அல்லாஹ்வையோ இறைதூதரையோ விசுவாசங் கொள்ளாதவருமான ஒருவருக்கு வழிப்படுவதை மக்கள் நிராகரித்தனர்.

மதீனாவின் கவர்னராக இருந்த வலீதிப்னு உத்பா இப்னு அபீசுபியானுக்கு தந்தை முஆவியாவின் மரணம் பற்றிய செய்தியை அறிவித்து பொதுவாக மதீனா வாசிகளிடமும் குறிப்பாக, ஹுஸைனிப்னு அலீயிடமும் தனக்கு சத்தியப் பிரமாணம் பெறுமாறு கட்டளை பிறப்பித்தார் எஸீத்.

வலீத் இமாம் ஹுஸைனுக்கு விடயத்தை வாசித்துக் காட்டிய போது, இமாம் ஹுஸைன் அவர்களோ, "வலீதே! நிச்சயமாக நாம் அஹ்லுல்பைத்தினர். இறைவன் எம்மைக் கொண்டே (இஸ்லாத்தை) ஆரம்பித்தான். எம்மைக் கொண்டே முடித்து வைப்பான். என்னைப் போன்ற ஒருவர் குடியும் பாவமும் நல்லவர்களைக் கொலை செய்யும் வக்கிரமும் கொண்ட எஸீதைப் போன்ற ஒருவருக்கு சத்தியப் பிரமாணம் செய்யமாட்டார் என்பது உனக்குத் தெரியும்" எனக் கூறினார்கள்.

எதிரிகள் தம்மையே இலக்கு வைத்துள்ளனர் என்பதை உணர்ந்து கொண்ட இமாமவர்கள் புனித மதீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரிலிருந்து வெளிப்பட்டு புனித மக்கா நகரை நோக்கிப் பயணித்தார்கள். ஈராக்வாசிகளோ அவர்களை தங்கள் நாட்டிற்கு வருமாறும் ஆட்சிபீடத்திற்கு அமர்த்த சத்தியப் பிரமாணம் செய்யத் தாம் தயாராக இருப்பதாகவும் தொடர்ச்சியாக கடிதங்களை எழுத ஆரம்பித்தனர்.

ஏனெனில், மற்றவர்களை விடவும் இவர்களே ஆட்சிபீடமேறத் தகுதி பெற்றவர்கள், றசூலுல்லாஹ்வின் பிள்ளையும் பேரருமாவர். "ஹஸனும் ஹுஸைனும் ஆட்சி செய்தாலும் செய்யாவிட்டாலும் தலைவர்களே" என அவர்களது தலைமைத்துவம் பற்றி அவர்களது பாட்டனாரின் ஹதீஸ் கூறுகின்றது. அதாவது ஆட்சியை எதிர்த்து நின்றாலும் அல்லது அவர்களிடமிருந்து ஆட்சி பறிக்கப்பட்டாலும் அவர்கள் தலைவர்களே.

ஒரே வாசகத்தைக் கொண்ட சுமார் பன்னிரண்டாயிரம் மடல்கள் வந்து குவிந்தன. களநிலவரம் சாதகமாகவும் மக்கள் அனைவரும் போராடச் சித்தமாகவும் இருப்பதாகவும் அம்மடல்களில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், இலட்சக் கணக்கான போராளிகளைக் கொண்ட படை தங்களோடு இணைந்து போராடத் தயாராக உள்ளது எனவும், இவ்வாறான நிலையில் இமாம் ஹுஸைன் அவர்கள் வராவிட்டால் மறுமை நாளில் இறைவனுக்கு முன்னால் தாம் வழக்காடுவோம் எனவும் எழுதப்பட்டிருந்தது.

களநிலவரத்தைக் கண்டுவர தம் சிற்றப்பன் மகன் முஸ்லிம் இப்னு அகீலை இமாம் ஹுஸைன் அவர்கள் கூபா நகருக்கு அனுப்பி வைத்தார்கள். ஹுஸைனின் தூதுவரும் பிரதிநிதியுமான முஸ்லிமைச் சுற்றி சுமார் பதினெட்டாயிரம் அல்லது இருபத்தினான்காயிரம் பேர் ஒன்று கூடி ஒரே நாளில் அவர்களுக்கு பைஅத் செய்தார்கள்.

மக்கள் தமக்கு பைஅத் செய்துள்ளமை பற்றி முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இமாமுக்கு அறிவித்து கூபாவை நோக்கி விரைந்து வருமாறு செய்தி அனுப்பினார்கள். இதை அறிந்த எஸீத், உபைதுல்லா இப்னு ஸியாதை கூபாவுக்கு அனுப்பி வைத்தான். கூபாவுக்கு வருகை தந்த ஸியாத் அங்குள்ள குல. கோத்திரத் தலைவர்களை அச்சுறுத்தி எச்சரித்ததுடன் (தம்மோடு உடன்படுவோருக்கு வெகுமதி வழங்குவ தாகவும்) பேராசை காட்டினான். மக்கள் முஸ்லிமை விட்டும் பகுதி பகுதியாகப் பிரிய ஆரம்பித்தனர். ஈற்றில் ஹஸ்ரத் முஸ்லிம் தனிமைப்படுத்தப்பட்டார். அப்போது முஸ்லிமுக்கு அடைக்கலம் வழங்கி ஒரு பெண் உபசரித்தாள்.

வீட்டிலிருந்து வெளியேறிய முஸ்லிம் அவர்கள் தம்மை முற்றுகையிட்டுத் தாக்க வந்தோர் அனைவரையும் பந்தாடினார்கள். பின்னர் முஸ்லிமை மடக்கிப்பிடித்து இருகால்களையும் பிணைத்து சந்தை வழியே சண்டாளர்கள் இழுத்துச் சென்றார்கள்.

இத்தகவல்கள் எதுவும் அறியாத இமாம் ஹு"ஸைன் அவர்கள், துல்ஹஜ் மாதம் எட்டாம் திகதி ஈராக்கை நோக்கிப் புறப்பட்டார்கள். ஈராக்கை நோக்கிச் செல்ல வேண்டாம் என ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் உட்பட பலரும் இமாமவர்களைத் தடுத்தனர். "இப்னு அப்பாஸ் அவர்களே! நிச்சயமாக இறைதூதர் எனக்கோர் விடயத்தை ஏவி உள்ளார்கள். அதை நான் நிறைவேற்ற வேண்டும்" என்றார்கள் இமாம் ஹு"ஸைன் அவர்கள்.

"உங்கள் பாட்டனார் எதனை ஏவி உள்ளார்கள்?" என இப்னு அப்பாஸ் கேட்டபோது, இமாம் ஹு"ஸைன் சொன்னார்கள்: "எனது பாட்டனார் என் கனவில் தோன்றி, "ஹு"ஸைனே! ஈராக்கை நோக்கி வெளிக் கிளம்பிச் செல்லும். நிச்சயமாக இறைவன் உம்மை படுகொலை செய்யப் பட்டவராகவே காண விரும்புகின்றான்" எனக் கூறினார்கள் என்றார்கள் இமாம் ஹு"ஸைன் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்களோ, "நல்லது, உங்களோடு பெண்களை எதற்காக கொண்டு செல்கின்றீர்கள்?" என வினவியபோது, "அவர்கள் றசூலுல்லாஹ்வின் எச்ச சொச்சங்கள். அவர்களைப் பாதுகாக்க யாருமில்லை, அவர்களும் என்னைவிட்டுப் பிரியமாட்டார்கள்" என்றார்கள் பெரியார் ஹுஸைன் அவர்கள்.

கூபாவை நோக்கி அருமை ஹுஸைன் (அலை) பயணிக்கின்றார்கள். வழி நடுவே படைத்தளபதி ஹுர் இப்னு எஸீத் அர்ரியாஹியின் ஆயிரம் குதிரை வீரர்களைக் கொண்ட படையைச் சந்திக்கின்றார்கள். ஹுஸைனை மடக்கிப் பிடித்து இப்னு ஸியாதிடம் கூபாவுக்குக் கொண்டு செல்ல முயன்றனர். இமாம் ஹுஸைன் அவர்களோ அடிபணிய மறுத்து விடுகின்றார்கள். ஈற்றில் இமாம் ஹுஸைன் கூபாவுக்குச் செல்லவோ மதீனாவுக்குத் திரும்பிச் செல்லவோ முடியாதவாறு நிறுத்தப்படுகின்றார்கள். பின்னர் கர்பலாவை அடைந்ததும் அங்கே தங்கிவிடுகின்றார்கள்.

அதைத் தொடர்ந்து "என்னிடம் ஹுஸைனின் தலையை யார் கொண்டு வருகின்றாரோ அவருக்கு மிகப் பெறுமதி வாய்ந்த சன்மானம் வழங்கப்படுவதோடு பத்து வருடங்களுக்கு ரை எனும் ஊரின் மாநில ஆட்சிபீடமும் வெகுமதியளிக்கப்படும்" என இப்னுஸியாத் கூபாவில் பிரகடனப்படுத்தினான். "நான் அதற்குத் தயார்" என உமர் இப்னு ஸஅத் பதிலளித்தான். நான்காயிரம் வீரர்களுடன் போர்க் கொடியும் இவனிடம் வழங்கப்பட்டது.

மறுநாள் விடியற் காலை கர்பலாவை நோக்கி முதன் முதலில் உமரிப்னு ஸஅதின் படையே வந்திறங்கியது. படிப்படியாக முஹர்ரம் ஒன்பதாம் நாள் வரை சுமார் முப்பதாயிரம் படை வீரர்கள் வந்து சேர்ந்தனர். முஹர்ரம் ஏழாம் திகதி இமாம் ஹுஸைன் மற்றும் அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினர்களான அஹ்லுல்பைத்தினருக்கும் யூப்ரடீஸ் நதிக்குமிடையே தடை ஏற்படுத்தப்பட்டது. ஒன்பதாம் நாள் அவர்களுக்கு தாகம் வலுவடைந்தது. சிறுவர்களுக்கும் பால்குடி குழந்தைகளுக்கும் கடுந்தாகம் ஏற்பட்டது.

## தண்ணீர்! தண்ணீர்! கண்ணீர்!!

செய்யிதினா ஹுஸைனின் புதல்வி பீபி ஸகீனா அப்போதிருந்த நிலைமையை இவ்வாறு வர்ணிக்கின்றார்கள்: "முஹர்ரம் ஒன்பதாம் நாள் பாத்திரங்கள் காய்ந்து விட்டன. குடிக்கத் தண்ணீரின்றி நாவரண்டு விட்டது. என் சிற்றம்மா ஸெய்னப் எமக்காகக் கொஞ்சம் தண்ணீர் வைத்திருக்கலாம் என நினைத்து அவர்களிருந்த கூடாரத்திற்குச் சென்றேன். அங்கு கண் கலங்கும் காட்சி! பீபி ஸெய்னப் அவர்கள் பாலகன் அலீ அஸ்கரை (அப்துல்லாஹ்வை) மடிமீது சுமந்திருக்கின்றார். பச்சிளம் பாலகனின் பரிதாபம் என்னவென்பேன். தாங்கொண்ணா வரட்சியினால் நாவை வெளியே விடுவதும் உள்ளே எடுப்பதுமாக, மிருதுவாக வாயை மெல்லும் நெஞ்சை நெகிழ்விக்கும் காட்சி! பரிதாபப்பட்டவாறு தண்ணீர் கேட்காது தாமதித்து அசந்து போனேன். "நீ ஏன் அழுகின்றாய்?" என என்னை விளித்த என் சிறிய தாயிடம் "பால்குடிக்க வேண்டிய என் தம்பியின் பரிதாபம் என்னை அழவைத்து விட்டதம்மா" என்றேன் நான். "அன்புத் தாயே, உறவினர்களின் ஏனைய கூடாரங்களில் சிலவேளை தண்ணீர் இருக்கலாம். வாருங்கள் சென்று பார்ப்போம்" எனக் கூறியவாறு, நாமனைவரும் அனைத்துக் கூடாரங்களிடமும் தண்ணீர் கேட்டலைந்தோம். எனினும், தண்ணீர் கிடைக்கவில்லை. தன் இருப்பிடம் திரும்பிய பொறுமையின் மகுடம் பெருமங்கை ஸெய்னப் (அலை) அவர்களோடு நாமும் ஒன்றித்திருந்தோம். பாவம், பரிதாபம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமாராக ஆண் பெண் என இருபது குழந்தைகள் நீர் வேண்டி தாகம் தாகம் எனும் ஒப்பாரி வைத்து அழுத அழுகை, பாலைவனமெங்கும் ஒலித்தது.

ஒன்பதாம் திகதி மாலை ஆறாயிரம் பேர் கொண்ட இறுதிப்படை, இப்னு ஸியாதின் செய்தியுடன் ஷிம்ரிப்னு தில் ஜௌஸன் தலைமையில் கர்பலா மண்ணை வந்தடைந்தது.

'ஹுஸைனும் அவரது தோழர்களும் என் கட்டளைக்குக் கட்டுப்பட்டால் அவர்களை பாதுகாப்பாக என்னிடம் அனுப்பிவை! அவர்கள் அதை ஏற்க மறுத்தால், அவர்களைக் கொன்றொழிக்கும் வரை நெருக்குதல்களை ஏற்படுத்து! ஹுஸைனைக் கொன்றொழித்து குதிரைகளினால் அவரது மேனியை துவம்சம் செய்து...' என தன்மன விகாரத்தை அம்மடலில் கோடிட்டுக் காட்டியிருந்தான் இப்னு ஸியாத்.

மாலைப் பொழுது, எதிரிப் படை இமாம் ஹுஸைனின் கூடாரத்தைச் சூழ்ந்து கொண்டது. தம் முழங்கால் மீது தலையை வைத்து சற்றுத் துயிலுற்றிருந்த இமாம் அவர்கள், தமது சகோதரி ஸெய்னப் பிந்து அலீ அவலக் குரல் எழுப்பியவாறு தம்மருகே வந்து "நெருங்கிவரும் சப்தங்கள் கேட்கவில்லையா?" எனக் கூறிய போது எழுந்தார்கள். "(சற்றுமுன்) றசூலுல்லாஹ் என் கனவில் தோன்றி 'எம்மை வந்தடைவீர்' எனக் கூறினார்கள்" என சகோதரியிடம் இமாமவர்கள் கூறிய போது, தம் கன்னங்களில் அடித்துக் கொண்ட பீபி ஸெய்னப் அவர்கள், "வாவய்லா!" எனக் கதறி அழுதார்கள்.

"நீ கைசேதப்பட வேண்டாம் அருமைச் சகோதரியே! எம்மை மற்றவர்கள் பழிக்காதிருக்கட்டும். அல்லாஹ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமக்கு நல்லருள் புரிவானாக" என ஏந்தல் ஹுஸைன் அவர்கள் தம் சகோதரியை ஆற்றுப்படுத்தினார்கள்.

அச்சமயம், "எதிரிகள் முன்னேறி வந்து விட்டனர். விழித்தெழுங்கள் என் சோதரனே!" என அப்பாஸ் இப்னு அலீ கூறிய போது துணுக்குற்ற இமாம் ஹுஸைன் அவர்கள் சகோதரர் அப்பாஸை நோக்கி, "அப்பாஸே! அவர்களிடம் சென்று, உங்களுக்கு என்ன நடந்தது? ஏன் அடர்ந்தேறுகின்றீர்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்?' என வினவுங்கள்" என வேண்டினார்கள்.

இருபது குதிரை வீரர்களுடன் அவர்களிடம் சென்ற அப்பாஸ், "உங்களுக்கு என்ன நேர்ந்தது? உங்களுக்கு என்ன வேண்டும்?" என வினவினார்கள். அதற்கு அப்படையினர், "அமீரின் கட்டளையின் பிரகாரம் அவரின் ஏவலுக்கு இணங்கி வாருங்கள். இல்லையேல் உங்கள் மீது அவரது கட்டளையை நிறைவேற்றுவோம்" எனக் கூறினர்.

திரும்பி வந்த அப்பாஸ், எதிரிகளின் செய்தியை இமாமிடம் கூறினார். இமாம் ஹுஸைன் அவர்கள் அப்பாஸை நோக்கி, "அவர்களிடம் திரும்பிச் சென்று, முடியுமாயின் விடயத்தை நாளை வரை பிற்போடுமாறும் எங்கள் இரட்சகனை வணங்கி அவனிடம் பிரார்த்தித்து பிழைபொறுக்க இன்றிரவை வழங்குமாறும் வேண்டிக் கொள்ளுங்கள்" எனக் கூறி ஹஸ்ரத் அப்பாஸை இமாம் ஹுஸைன் அவர்கள் தூது அனுப்பினார்கள். "ஏனெனில், நான் அவனை வணங்கும் பேருவகை கொண்டவன். அவனது வேதத்தை பாராயணம் செய்பவன் என்பதை அவனே நன்கறிவான்" என்றார்கள் இமாம் ஹுஸைன் அவர்கள். திரும்பிச் சென்ற அப்பாஸ், படையினரிடம் இமாமின் கோரிக்கையை முன்வைத்த போது அவர்களுக்கு கால அவகாசம் வழங்க முடியாது என அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்தனர். இதனைக் கண்ணுற்றுச் சினங்கொண்ட அம்ரிப்னு அல்ஹஜ்ஜாஜ் அஸ்ஸுபைதி என்பவர், "உங்களுக்கு கேடு உண்டாகட்டும். இறைவன் மீதாணையாக, துருக்கி அல்லது தைலம் பிரதேசவாசி ஒருவன் இவ்வாறான விண்ணப்பத்தை முன்வைத்திருந்தால்கூட அவர்களுக்கு நாம் உடன்பட்டிருப் போம். ஆனால், இவர்களோ றசூலுல்லாஹ்வின் உறவினர் அல்லவா?" எனத் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். அன்றைய ஆசூரா இரவை, இமாம் ஹுஸைனும் அவர்களது நண்பர்களும் பக்திப் பரவசத்தால் நோயாளிகள் போன்று, நின்ற (காயிம்) நிலையிலும், உட்கார்ந்த பணிந்த (றாகிஃ) நிலையிலும் சிரம் தாழ்த்திய (ஸாஜித்) நிலையிலும் கழித்தார்கள்.

ஸாலாரே ஷஹீதான் அபாஅப்தில்லாஹ் அல்ஹுஸைன் அவர்கள் அனைவரையும் ஒன்றுகூட்டி "நிச்சயமாக, வாக்குறுதியை நிறைவேற்றும் நல்ல வாஞ்ஞைமிக்க எனது நண்பர்களை விடச் சிறந்த நண்பர்களை நான் கண்டதில்லை. அவ்வாறே, பரோபகாரமிக்க நல்லுறவுள்ள எனது குடும் பத்தைவிடச் சிறந்த குடும்பத்தையும் நான் அறியமாட்டேன். உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்" என ஆத்மார்த்த உரை நிகழ்த்திய இமாம் ஹுஸைன் அவர்கள், "நிச்சயமாக நீங்கள் அனைவரும் எமக்கு உதவியும் உபகாரமும் வழங்கினீர்கள். அறிவீர்களாக! எமக்கும் அந்த எதிரிகளுக்குமிடையே நாளை (ஒரு நாள்) மாத்திரமே உள்ளது என நான் நினைக்கின்றேன். அறிவீர்களாக! நிச்சயமாக நான் எனக்கு வழங்கிய உறுதி மொழியை உங்கள் அனைவரிடமிருந்தும் விலக்கிக் கொள்கின்றேன். எனக்காக உங்கள் மீது எவ்வித குற்றமோ பொறுப்போ கிடையாது. இருள் படர்ந்த இவ்விரவில் ஒட்டகத்தை உங்களுடன் எடுத்துக் கொண்டு உங்களில் ஒவ்வொரு வரும் எனது குடும்பத்திலுள்ள ஒருவரை (உதவிக்கு) அழைத்துக் கொண்டு இரவின் இருளைப் பயன்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இங்கிருந்து) பிரிந்து செல்லுங்கள். என்னைத் தனியே விடுங்கள். அந்தக் கூட்டமோ என்னைத் தவிர எவரையும் இலக்கு வைக்கவில்லை" எனக் கூறினார்கள் பெரியார் ஹுஸைன் அவர்கள்.

அவர்களது சகோதரர்களும் பிள்ளைகளும் அப்தில்லாஹ் இப்னு ஜஃபரினது பிள்ளைகளுமான இமாமின் குடும்பத்தினர் இமாமை நோக்கி, "அவ்வாறு நாங்கள் செய்யப் போவதில்லை! உங்களுக்குப் பின்னர் நாங்கள் வாழ்வதா?" எனக் கூறி, "அல்லாஹ் எங்களை அவ்வாறு வைத்துவிடக் கூடாது. றசூலுல்லாஹ்வின் புதல்வரே! மக்கள் எங்களுக்கு என்ன சொல்வார்கள்? நாங்கள் அவர்களுக்கு என்ன சொல்லப் போகின்றோம்?" எனக் கலங்கினர்.

"எங்கள் தலைவரை, எங்கள் பெரியாரை, எங்கள் நபியின் புதல்வரை நாங்கள் கைவிட்டு, அவருடன் சேர்ந்து அம்பெய்தாது, அவரோடு இணைந்து ஈட்டியெறியாது, அவரோடு இணைந்து வாள் வீசாது அவரை தன்னந் தனியே கைவிட்டு விட்டோம் என்றா எம் சந்ததிக்குக் கூறப் போகின்றோம்! றசூலுல்லாஹ்வின் புதல்வரே! ஒருபோதும் உங்களை விட்டுப் பிரியமாட்டோம். மாறாக, நாங்கள் கொல்லப்படும் வரை உங்களைப் பாதுகாத்து உங்கள் நுழைவாயிலாக நாங்களும் நுழைவோம். உங்களுக்குப் பின் நாம் ஜீவிப்பதை அல்லாஹ் இழிவாக்குவானாக!" என உணர்சி பொங்க அவர்கள் கர்ஜித்தனர்.

பின்னர் ஒருவர் பின் ஒருவராக எழுந்து தத்தம் அர்ப்பணிப்பையும் விசுவாசத்தையும் பிரகடனப்படுத்தினர். முஸ்லிம் இப்னு அவ்ஸஜா எழுந்து, "இந்தப் பகைவர்கள் உங்களைச் சூழ்ந்திருக்கையில், நாம் உங்களைத் தனியே விட்டுச் செல்வதா! அல்லாஹ்மீது ஆணையாக, அவ்வா றில்லை. இறைவன் என்னை அப்படி ஆக்காதிருப்பானாக. அவர்களது நெஞ்சுகளில் என் ஈட்டியால் தாக்கி எவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்திருக்க முடியாதவாறு வாள் வீசுவேன். என்னிடம் ஆயுதம் இல்லாவிட்டால், கல்லெறிந்தேனும் அவர்களுடன் போராடுவேன். மரணிக்கும்வரை உங்களை விட்டுப் பிரியாது உங்களோடு போராடுவேன் எனப் பிரகடனஞ் செய்தார்.

ஸஅதிப்னு அப்தில்லாஹ் அல்ஹனபி தன் உறுதி யுரையை இவ்வாறு வெளிக் காட்டினார்: "இறைதூதர் அவர்களின் புதல்வரே! அல்லாஹ் அறியும்வரை உங்களைப் பாதுகாப்பேன். அவனின் திருத்தூதரின் பிரதிநிதியை நான் ஒருபோதும் தனியே விட்டுவிட மாட்டேன். உங்களோடு இணைந்து போராடி மடிந்து, மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு, பின்னர் தீக்கிரையாகி வீழ்த்தப்பட்டு, இவ்வாறு எத்தனை தடவைகள் நிகழ்ந்தாலும் உங்களை விட்டும் என் ஆதரவை விலக்கிக் கொள்ள மாட்டேன். முடிவே இல்லா மாபெரும் பாக்கியத்தை அடைந்து கொள்ள ஒரு முறைதானே மரணம்! எவ்வாறு நான் அதைப் பெறாதிருப்பது?!" எனக் கூறினார்.

மற்றொரு போராளியான ஸுஹைர் இப்னு அல்கைன் கூறினார்: "அல்லாஹ் மீதாணையாக, றசூலுல்லாஹ்வின் புத்திரரே! நிச்சயமாக நான் ஆயிரம் தடவைகள் கொல்லப்பட்டு எழுப்பப்பட்ட போதிலும் உங்களை உங்கள் சகோதர இளைஞர்களை உங்கள் குடும்பத்தின் குழந்தை களை காப்பாற்றப் போராடுவதை அல்லாஹ் எனக்கு ஆசீர்வதிப்பானாக!" என ஆக்ரோஷமாக மொழிந்தார்.

இவ்வாறு நண்பர்கள் பலரும் தத்தம் உள்ளக்கிடக்கை களை வெளிக்காட்டுவதை அவதானித்த இமாம் ஹுஸைன் அவர்கள் அந்நண்பர்களை நோக்கி, "அவ்வாறே நீங்கள் நடந்து கொண்டால், உங்கள் தலைகளை உயர்த்தி உங்கள் அந்தஸ்தைப் பாருங்கள்" என ஆசீர்வதித்தார்கள்.

மீண்டும் இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள் அம்மக்களை நோக்கி, "மக்களே! நிச்சயமாக நான் நாளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலை செய்யப்பட்டு விடுவேன். நீங்களும் என்னோடு கொலை செய்யப்பட்டுவீர்கள். உங்களில் எவரும் எஞ்சப்போவதில்லை!" எனப் பகர்ந்தார்கள்.

"உங்களுக்கு உதவி புரியவும் உங்களோடு உயிர்த் தியாகம் செய்யவும் வாய்ப்பளித்து எம்மைக் கண்ணியப் படுத்திய அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும். நீங்கள் அடையப் போகும் உன்னதத்தை நாமும் அடைய வேண்டாமா றசூலுல்லாஹ்வின் புதல்வரே?" என அவர்கள் கேட்டனர்.

"இறைவன் உங்களுக்கு நல்லருள் புரிவானாக!" என்றார்கள் இமாம் அவர்கள்.

இமாம் ஹஸனின் புதல்வர் ஹஸ்ரத் காஸிம் எனும் சிறுவர், இமாம் ஹுஸைனை நோக்கி, "நானும் உயிப்பலியாவேனா?" எனக் கேட்ட போது கண்ணீர் சிந்திய செம்மல் ஹுஸைன் அவர்கள், "என் ஆருயிர் அன்பு மகனே! மரணம் பற்றி என்ன சொல்கிறாய்?" என வினவ, "உங்களோடு சேர்ந்து (போராடி) மடிவது தேனை விடவும் இன்பமானது (அஹ்லா மினல் அஸல்)" என அவர் கூறினார்.

"உன் சிறிய தந்தை உனக்கு அர்ப்பணமாகட்டும். அல்லாஹ் மீதாணையாக, படுகொலை செய்யப்படும் ஆண்களில் நல்ல பல சோதனைகளின் பின் நீயும் என் அருந்தவப் புதல்வன் அப்துல்லாஹ்வும் உயிப்பலியாவீர் கள்" என்றார்கள் இமாமவர்கள்.

"என் சிறிய தந்தையே, பாலகரைக் கொன்று விடுவார்கள். அவரைப் பெண்களிடம் சேர்த்து விடுங்கள்" எனப் பகர்ந்தார் ஹஸ்ரத் காஸிம் இப்னு ஹஸன் அவர்கள். இமாம் ஹுஸைன் அவர்கள், அவரைத் தம் நா அருகே கொண்டு சென்றபோது, ஒரு பாவியின் அம்பு அவர் குரல்வளையைத் தாக்கி விட, பின்னர் இமாம் அங்குள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களை அஸத் கோத்திரத்தினரிடம் செல்லுமாறு பணித்தார்கள். அவையிலிருந்து எழுந்த அலீ இப்னு மழாஹிர், "என் தலைவரே! நான் கொலை செய்யப்பட்ட பின் எனது பெண்கள் கைது செய்யப்படுவார்கள். அப்போது உங்கள் பெண்களும் கைது செய்யப்படுவதைப் பற்றி நான் அச்சப்படுகின்றேன்" என்றார்.

பின்னர் தனது கூடாரத்திற்கு இப்னு மழாஹிர் சென்ற போது அவரது மனைவி எழுந்து அவரை முகமலர வரவேற்றார். அவரது மனைவி ∴கரீபே பாத்திமா "இமாம் ஹுஸைன் உங்கள் மத்தியில் ஆற்றிய உரையைச் செவிமடுத்தேன். உரையின் இறுதியில் கவலையும் கண்டிப்பும் காணப்பட்டதே, அது எனக்கு விளங்கவில்லை அது என்ன?" எனக் கேட்டார்கள்.

"அதுவா? ஹுஸைன் சொன்னார்கள், எம்மோடு பயணத்திலுள்ள பெண்கள் ஸஅத் கூட்டத்தாரிடம் செல்லட்டும். ஏனெனில், நாளை நான் உயிர்ப் பலியாகிவிடுவேன், எனது பெண்கள் கைதியாகி விடுவார்கள் என்றார்கள்".

"இப்னு மழாஹிர்! நீங்கள் என்ன செய்வீர்கள்?" என அம்மாது கேட்டபோது, "உங்களை உங்கள் சிறிய தந்தையின் கூட்டத்தினரிடம் சேர்த்து விடுகின்றேன், எழுந்திருங்கள்" என்றார்கள். அப்போது அம்மாது கூடாரம் அடித்திருந்த தூணில் தன் தலையை அடித்து, "வஃழாஹ் பெருமானாரின் பெண்கள் கைதிகளாகப் பிடிபட்டு நாம் மட்டும் பாதுபாப்பாக வாழ்வது எனக்கு நீதியாகத் தெரியல்லை! இது உங்களுக்கு சந்தோசமாக இருக்குமா? இப்னு மழாஹிரே!" என்றார். "உங்கள் முகம் முஹம்மது நபியிடம் வெண்மையாகவும், எனது முகம் பீவி பாத்திமாவிடம் கருப்பாகவும் இருப்பதா? நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களுக்கு மன ஆறுதல் கூறுங்கள், நாம் பெண்களுக்கு ஆறுதல் கூறுகின்றோம்" என்றார் மீண்டும் அம்மங்கை.

கண்கலங்கியவாறு அலீ இப்னு மழாஹிர், தலைவர் ஹு"ஸைனிடம் சென்ற போது, "ஏனழுகின்றீர்கள்?" எனக் கேட்டார்கள் இமாம் ஹு"ஸைன் அவர்கள்.

"அஸத் கோத்திரத்தினர் (நாம் கூறியதை) ஏற்க வில்லை. மாறாக, எம்மோடுதான் இருப்பார்களாம்" என இப்னு மழாஹிர் கூறிய போது கண்மணி ஹு"ஸைன் அவர்கள் "மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்" எனக் கண்ணீர் சிந்தியவாறு கூறினார்கள்.

## அறநெறி காக்கும் போர் - அறநெறி வழியிலேயே...

ஆஷூரா தினம் அதிகாலையில் அண்ணல் ஹு"ஸைன் அவர்கள் தம் நண்பர்களை அழைத்து, தொழுமாறு பணித்தார்கள். வுழுவுக்குப் பதிலாக தயம்மும் செய்து நண்பர்களோடு சுப்ஹு"த் தொழுகையை நிறைவேற்றினார்கள். பின்னர் இவ்வாறு பிரார்த்தித்தார்கள்:

"யாஅழ்ழாஹ்! சோதனைகளின் போது நீயே எனது நம்பிக்கை, கஷ்டத்தின்போது நீயே எனது எதிர்பார்ப்பு, எனக்கு ஏற்பட்ட அனைத்து விடயங்களிலும் நீயே எனக்கு நம்பிக்கையும் பாதுகாப்புமாவாய். உள்ளங்களை பலமிழக்கச் செய்து, தந்திரோபாயங்களைக் குன்றச் செய்து... எதிரி சின்னாபின்னமாகிய சோதனைகள் எத்தனை, எத்தனை! உன்னைத் தவிர எனக்கு விருப்பம் எதுவுமில்லை, அதனை விட்டும் எமக்கு விடுதலை தந்து தெளிவை உண்டாக்கினாய். அருட்கொடைகள் அனைத்திற்கும் பாதுகாவலனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மைகள் யாவற்றின் தோழனும், விருப்பத்தின் உயர்வுக்கே உரித்தானவனும் நீயே!"

பின்னர் தம் தோழர்களை நோக்கி, "நிச்சயமாக அல்லாஹ் நீங்களும் நானும் உயிர்ப்பலியாவதை அனுமதித்துள்ளான். எனது புதல்வர் அலீ இப்னுல் ஹுஸைன் (ஸைனுல்ஆபிதீன்)னைத் தவிர நீங்கள் அனைவரும் உயிர் நீத்து விடுவீர்கள். எனவே, இறைவனைப் பயந்து பொறுமை யாக இருங்கள்" எனக் கூறினார்கள்.

அன்று பொழுது விடிந்ததும் உமர் இப்னு ஸஅத் மனித கூட்டத்தோடு வெளியே வந்தான். படையின் வலப்புறம் உமர் இப்னு ஹஜ்ஜாஜ் அஸ்ஸுபைதி, இடது புறம் ஸிம்ர் இப்னு தில்ஜௌஸன். உர்வதிப்னு கைஸை குதிரைப் படைத் தளபதியாகவும் தரைப்படைக்கு ஸஅதிப்னு றபீயையும் நியமித்து தன் பணியாள் துறைதிடம் கொடியையும் வழங்கி வைத்தான்.

இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள் பெருமானாரின் அல்-முர்தஜஸ் எனும் குதிரையை அழைத்தார்கள், நண்பர்களை அணிவகுத்தார்கள் அவர்களோடு ஏறக்குறைய முப்பத்திரண்டு குதிரைப் படையினரும் நாற்பது காலாட் படையினரும் காணப்பட்டனர்.வலப்புறமாக ஸுஹைர் இப்னு அல்-கைனையும ஹபீப் இப்னு மழாஹிரை இடப்புறமாகவும் வைத்து தன் சகோதரர் ஹஸ்ரத் அப்பாஸிடம் போர்க் கொடியைக் கொடுத்தார்கள்.

இல்லங்களையும் கூடாரங்களையும் பின்புறமாக வைத்து இரவில் தோண்டிய அகழியில் கம்புகளையும் தடிகளையும் இட்டு எதிரிகள் பின்புறமாக தாண்டிவராது தீமூட்டுமாறு பணித்து போர் முனையை ஒருமுகப்படுத் தினார்கள். எதிரிகள் கோபமடைந்தனர். "ஹுஸைனே! மறுமைக்கு முன்னதாகவே நெருப்பை விரைவாக்கிவிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாயா?" என ஸிம்ர் கூக்குரலிட்டான். "யார் இது ஸிம்ர் போலிருக்கே" என்றார்கள் ஏந்தல் ஹுஸைன் அவர்கள். "ஆம்" என்றார்கள். "எப்ன ரா.்.யியதுல் முஅஸ்ஸா! நரகத்திற்கு முந்தியடுத்துச் செல்ல நீதான் உரித்துடையவன்" என்றார்கள்.

பின்னர் முஸ்லிம் இப்னு அவ்ஸஜா அம்பெய்த முற்பட்ட போது அதனைத் தடுத்த இமாம் ஹுஸைன் "போரை ஆரம்பிப்பதை நான் வெறுக்கிறேன்" என்றார்கள். பின்னர் இமாமவர்கள் தம் சகாக்கள் புரைர் இப்னு ஹுழைர் உட்பட சில தோழர்கள் சகிதம் முன்சென்றனர். அங்கு பிரசன்னமாயிருந்த கூட்டத்தாருடன் பேசுமாறு இமாம் கூறியபோது ஹஸ்ரத் புரைர் முன்னெழுந்து, "கூட்டத்தினர்களே! இறைவனைப் பயந்து கொள்ளுங்கள்! பெருமானாரின் பெரும் பொக்கிஷம் (குர்ஆனும் அஹ்லுல் பைத்தும் எனும் ஹதீஸின் அடிப்படையில்) உங்கள் முன் மிகத் தெளிவாக உள்ளது. இவர்களோ பெருமானாரின் பிள்ளைகள். அவர்களது பெண்களும் அன்னாரின் சங்கைமிக்கவர்களாவர்... அவர்களுக்கு என்ன செய்யப் போகின்றீர்கள்?" என கேள்வி எழுப்பினார்கள்.

இது விடயமாக உபைதில்லாஹ் இப்னு ஸியாத் என்ன செய்யப் போகிறார் எனப் பார்ப்போம் என அவர்களில் சிலர் கூறியபோது, "இவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அவ்விடம் திரும்பிச் செல்ல அனுமதிக்க வேண்டாமா?" என வினவிய இப்னு புரைர், "கூபாவாசிகளே உங்களுக்கு கேடுண்டாகட்டும். நீங்கள் எழுதியவை, உறுதி அளித்தவை, இறைவனைக் கொண்டு சாட்சி கூறியவை எல்லாம் மறந்து விட்டீர்களா? உங்கள் நபியின் அஹ்லுல்பைத்தினர்களை அழைத்துவிட்டு யூப்ரடீஸ் நதியை அவர்களுக்குத் தடுத்து நிறுத்திய உங்களுக்கு கேடு உண்டாகட்டும்! உங்கள் நபி உங்களிடம் விட்டுச் சென்ற அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினரைச் சிரமப்படுத்தி விட்டீர்கள். மறுமையில் அல்லாஹ் உங்களுக்கு தண்ணீர் புகட்டாதிருக்கட்டும். நீங்களோ கெட்ட கூட்டத்தினர்" என்றார்.

அவர்கள் "நீர் சொல்வது என்னவென்றே புரியவில்லை" என்றனர். அப்போது ஹஸ்ரத் புரைர் அவர்கள் "உங்களைப் பற்றிய தெளிவைத் தந்த இறைவனுக்கே எல்லாப் புகழும்" எனக் கூறி "யா அழ்ழாஹ்! இந்தக் கூட்டத்தின் செயல்களை விட்டும் நான் நீங்கிக் கொள்கின்றேன். உனது கோபத்திற்கு ஆளானவர்களாக உன்னை அவர்கள் சந்திக்கும் வரை அவர்களிடையே கஷ்டத்தைக் கொடுப்பாயாக" எனப் பிரார்த்தித்தார்கள். அக் கூட்டத்தார் ஹஸ்ரத் புரைரை நோக்கி அம்பெய்த ஆரம்பித்தனர். புரைர் பின் நோக்கி நகர்ந்தார்.

அப்போது அவர்களை நோக்கிய இமாம் ஹு"ஸைன் அவர்கள் அனைவரும் கேட்கும் வகையில் "ஈராக் வாசிகளே!" என சப்தமிட்டு "நீங்கள் தர்மசங்கடப்படாதிருக்க உங்கள் எண்ணங்களை ஒன்றுபடுத்துங்கள். அவசரப்படாது உங்களுக்கு உபதேசிக்க உரிமையுள்ள எனது பேச்சைக் கேளுங்கள். நீங்கள் என்னோடு நீதமாக நடந்தால் ஜெயம் பெறுவீர்கள். அவ்வாறு நீங்கள் என்னோடு நீதமாக நடக்கா விட்டால் உங்கள் விடயம் உங்களுக்கு தெளிவின்றி பின்னர் கால அவகாசமின்றி முடிவு செய்து கொள்ளாது தெளிவற்றிருக்கக் கூடாது. (நன்கு யோசித்து முடிவு செய்யுங்கள்.) நிச்சயமாக இறைவேதத்தை இறக்கி வைத்த அல்லாஹ்வே எனது பாதுகாவலன். அவனே நல்லடியார்களைப் பாதுகாக்கின்றான்" என்றார்கள்.

பின்னர் இறைவனைப் போற்றித் துதித்து அவனுக்குரிய விதத்தில் அவனை நினைவுபடுத்தினார்கள். அண்ணலார் மற்றும் அஹ்லுல் பைத்கள் மலக்குமார் நபிமார் மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸலவாத் ஓதிய பின் அவர்கள் நிகழ்த்திய உரை இதுவரை யாருமே பேசாத செவிமடுக்காத அளவு கருத்தாழமிக்கதாக அமைந்திருந்தது.

## இதயக் கதவுகளைத் திறவுங்கள்! உண்மையை உணருங்கள்!

அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "கூபா வாசிகளே! நான் யார் எனத் தெரிந்து கொள்ள எனது வம்சத்தைப் பாருங்கள். பின்னர் மீண்டும் மீட்டிப் பாருங்கள். உங்களுக்கு என்னைக் கொலை செய்வது - என் கண்ணியமிக்க சிறப்பை அழிப்பது பொருத்தமானதா? என மீட்டிப் பாருங்கள். உங்களது நபியின் மகளின் பிள்ளையும் றசூலுல்லாஹ் வுக்கு தன் இரட்சகனிடமிருந்து (வஹி) வந்த போது அதனை முதலில் உண்மைப்படுத்தியவர்களது பிரதிநிதியும் அவரது சிறிய தந்தையின் மகனின் மகனும் அல்லவா நான்?

"ஸெய்யிதுஸ் ஷுஹதா ஹம்ஸா அவர்கள் எனது தந்தையின் சிறிய தந்தை இல்லையா?

"சொர்க்கத்தில் இரு இறக்கை கொண்ட ஜஃபர் தைய்யார் எனது சாச்சா அல்லவா?

"'இவர்கள் இருவரும் சொர்க்கத்து வாலிபர்களின் தலைவர்கள்' என என்னையும் என் சகோதரனையும் பற்றிக் கூறிய றசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் செய்தி உங்களை எட்டவில்லையா?

"எனது இந்த உரையை நீங்கள் ஏற்றுக் கொண்டால் அதுவே உண்மையாகும். இறைவன் மீது ஆணையாக பொய் சொல்பவர்கள் மீது இறைவனின் கோபம் உண்டாகும் என நான் அறிந்த நாள் முதல் நான் பொய் கூறியதே இல்லை. என்னை நீங்கள் பொய்யாக்கினால் அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது பற்றி நீங்கள் தெளிவு காண விரும்பினால் ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் அல்-அன்ஸாரி, அபூசயீத் அல்-குத்ரி, ஸஹல் இப்னு ஸஅத்அஸ்ஸாயிதி, ஸைதிப்னு அர்கம், அனஸ் இப்னு மாலிக் (ரழி) போன்றோரிடம் கேட்டுப் பாருங்கள். என்னைப் பற்றியும் என் சகோதரனைப் பற்றியும் பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து இவர்கள் செவிமடுத்ததைப் பற்றி உங்களுக்குக் கூறுவார்கள்.

"என் உதிரத்தை ஓட்டும் உங்களை விட்டும் இது தடுக்குமல்லவா?

"கூட்டத்தார்களே! இதுபற்றி நீங்கள் தெளிவற்றிருந்தால் நான் உங்களது நபியின் மகளின் புதல்வர் என்பதில் உங்களுக்கு சந்தேகமுண்டா? அல்லாஹ்மீது ஆணை! கிழக்கு மேற்குக்கிடையே (உலகில்) என்னைத் தவிர நபியின் மகளின் புதல்வர் உங்களிடமோ மற்றவர்களிடமோ வேறு யாராக இருக்க முடியும்?

"உங்களுக்கு கைசேதம்! உங்களில் யாரையாவது கொலை செய்த கொலைக் குற்றத்திற்கா அல்லது யாருடைய பணத்திற்காவது உரிமை கொண்டாடுவதற்கா அல்லது யாரையாவது காயப்படுத்தியதற்காக பழிவாங்கும் நோக்கிலா என்னை இலக்குவைத்துள்ளீர்கள்?"

அவர்கள் பதிலளிக்க அருகதையற்றுக் காணப்பட்ட போது, "என்னை உங்களுக்குத் தெரியுமா" என உரத்த குரலில் கேட்டார்கள் இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள்.

"ஆம், நீர் றசூலுல்லாஹ்வின் பிள்ளையும் பேரருமாவீர்" என்று கூறினார்கள்.

"எனது பாட்டனார் பெருமானார் (ஸல்) அவர்களாவர் என்பது உங்களுக்குத் தெரியுமா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆம், தெரியும்".

"அலீ இப்னு அபீதாலிப் எனது தந்தை என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"ஆம் தெரியும்" என்றனர்.

"றசூலுல்லாஹ்வின் மகள் பாத்திமா எனது தாய் என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"ஆம் தெரியும்" என்றனர்.

"பெண்கள் சமூகத்தில் முதலில் இஸ்லாத்தை ஏற்ற கதீஜா பிந்த் குவைலித் எனது பாட்டி என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"ஆம் தெரியும்" என்றனர்.

"என் தந்தையின் சிறிய தந்தை செய்யிதுஸ் ஷுஹதா ஹம்ஸா என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"ஆம் தெரியும்" என்றனர்.

"சொர்க்கத்தில் உள்ள ஜஃபர் தய்யார் எனது சிறிய தந்தை என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"ஆம் தெரியும்" என்றனர்.

"நான் சுமந்திருப்பது றசூலுல்லாஹ்வின் வாள் என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"ஆம் தெரியும்" என்றனர்.

"நான் அணிந்திருப்பது றசூலுல்லாஹ்வின் தலைப்பாகை என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"ஆம் தெரியும்" என்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மக்களில் முதலில் இஸ்லாத்தை ஏற்றவரும் அவர்களில் அறிவில் சிறந்தவரும் அவர்களில் சகிப்புத் தன்மை மிக்கவரும் மு.்.மினான ஆண்கள்கள் பெண்கள் ஆகியோரின் பாதுகாவலருமானவர் (இமாம்) அலீ என்பது உங்களுக்குத் தெரியுமா?

"ஆம் தெரியும்" என்றனர்.

"ஏன் என் உதிரத்தை ஓட்டப்போகின்றீர்கள்? தண்ணீரைத் தேடி ஒட்டகக் கூட்டம் வருவதைப் போன்று ஹவுழ் (கவுஸர்) இல் என் தந்தை உதவி புரிவார்களே?" எனக் கூறினார்கள் அபாஅப்தில்லாஹில் ஹுஸைன் (அலை) அவர்கள்.

"இவை அனைத்தும் எமக்குத் தெரியும். உம்மை நாம் விடமாட்டோம். தாகத்தோடு மரணத்தையும் சுவைத்துக் கொள்ளும்" என்றனர் அந்தப் பாவிகள்.

இவ்வாறான உரையைச் செவிமடுத்த அவர்களது பெண் மக்கள் அவர்களது சகோதரி செய்னப் ஆகியோர் கன்னத்தில் அறைந்து ஒப்பாரி வைத்து அழுது கதறிய சப்தத்தை அவர்களது சகோதரர் அப்பாஸ் மற்றும் மைந்தர் அலீ ஆகியோர் கவனித்த போது, "நீங்கள் இருவரும் அவர்களை அமைதிப்படுத்துங்கள். அவர்களது அழுகை ஓங்கி ஒலிக்கின்றது" என்றார்கள் வீரத் தியாகி இமாம் ஹுஸைன் அவர்கள்.

இமாம் ஹுஸைனின் மற்றுமொரு உரையை ஸெய்யித் இப்னு தாவூஸ் இவ்வாறு கூறுகின்றார்: இமாம் ஹுஸைன் அவர்கள் அந்தப் பெண்களை அமைதிப்படுத்த ஒட்டகத்தில் அல்லது தம் குதிரையில் ஏறிச் சென்று அமைதிப்படுத்தி னார்கள். அவர்கள் அமைதிகாக்க மறுத்தபோது உங்க ளுக்கு கைசேதம்! நீங்கள் அமைதி அடையாதிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது.? என் பேச்சைக் கேளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உங்களை நல்வழிக்காகவே அழைக்கின்றேன். எவர் எனக்கு வழிப்பட்டார்களோ அவர்களுக்கு நல்வழியும் எவர் எனக்கு வழிப்படவில்லையோ அவர்களுக்கு அழிவுமே உண்டாகும். என் பேச்சைக் கேட்காத நீங்கள் அனைவரும் பாவிகளாவீர்கள்" எனக் கூறிவிட்டு எதிரிகளை நோக்கி, "ஹராமானவற்றினால் உங்கள் வயிறுகள் நிரம்பியுள்ளன. உங்களது உள்ளங்களும் அவ்வாறே உள்ளன. நீதமாக நடக்காத உங்களுக்கு கேடுதான். (நான் செல்வதை) கேட்க வேண்டாமா? அமைதிகாக்க வேண்டாமா?" என்றார்கள். அங்கே அமைதி நிலவியது.

அப்போது அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து அவனை நினைவுபடுத்தி மலக்குகள் நபிமார் றசூல்மார் மீதும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் இனபந்துக்கள் மீதும் ஸலவாத் ஓதி உருக்கமான உரை ஒன்றை இவ்வாறு நிகழ்த்தினார்கள்: "கூட்டத்தார்களே எம்மீது அடர்ந்தெழுந்து அமைதியற்று கத்திக்கூவி அழைக்கும் உங்கள் மீது நாசம் உண்டாகட்டும். உங்களால் பாதுகாக்கப்பட வேண்டிய எம்மீது வாள் உருவியுள்ளீர்கள். உங்களது எதிரியும் எங்கள் எதிரியும் மூட்டிய தீயை நீங்கள் எரிய வைத்துள்ளீர்கள். (இதனால்) எங்களது எதிரிகளால் உங்கள் மீது சுமத்தப்பட்ட அநீதிக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களைக் காப்பாற்றிக்கொள்வதற் காக எம்மைக் கைவிட்டு, சண்டைக்கும் கிளர்ச்சிக்கும் சென்று அதனால் அநீதியைப் பலமடையச் செய்கின்றீர்கள். ஊர்ந்து செல்லும் பறவையைப் போன்றும் கடிவாளமிடப் பட்டவை (குதிரை) போன்றும் அதன்மீது விரைந்துள்ளீர்கள்.

"சமூகத்தின் அடிமைத்தனத்திலுள்ளவர்களே! உங் களை அழித்துக் கொண்டீர்கள். தனிமைப்பட்ட கூட்டங்களாகி விட்டீர்கள். ஒப்பந்தங்களை முறித்து, பேச்சுக்களைத் திரித்து, பாவங்களுக்கு உதவி புரிந்து செய்த்தானின் கட்டளையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றி சுன்னாவை அழிக்க முற்பட்ட அவர்களையா நம்பி நிற்கின்றீர்கள்? எங்களைப் புறக்கணித்து விட்டீர்களா? அல்லாஹ்மீது ஆணை! இது உங்கள் மீதான பழைய சதியாகும். (இது) உங்களுக்கு ஓர் அடிப்படையையும் உங்களது இதர கடமைகளையும் வெளிப்படுத்தியுள்ளது. பார்வைக்குக் கெட்ட கனியை - கொள்ளையிடப்பட்டதை உணவாகவும் கொண்டுள்ளீர்கள்.

"அறிந்து கொள்ளுங்கள்! .... எனக்கு முன் சண்டையா சமாதானமா எனும் இரு தேர்வுகளே உண்டு. இழிவு எம்மை விட்டும் தூரமாகவே உள்ளது. அதனை நாமும் இறைதூதரும் ஏற்பதை அல்லாஹ் விரும்புவதில்லை. தூய மடியு(யில் வாழ்ந்தவர்களு)ம் பரிசுத்த முன்னோர்களும் கண்ணியமிக்கவர்கள். போர்க்களத்தில் ஏற்படும் பாதகங் களை மோசமான உள்ளங்களைக் கொண்டவர்கள் அறிந்து கொள்ளட்டும். சிறிய தொகையினரைக் கொண்ட இச் சிறு குடும்பத்தோடும் உதவியற்ற வெற்றியாளர்களோடும் நான் பயணிக்கின்றேன்".

· இவ்வாறு அந்த எதிரிகளை விளித்தார்கள் அபா அபதில்லாஹில் ஹுஸைன் அவர்கள். அத்தோடு பின்வரும் கவியையும் பாடினார்கள்:

*அப்போதும் எதிரிகளைச் சிதறடித்த நாம்*
*இப்போதும் சிதறடிப்போம்.*
*இப்போ தெம்மை அவர் தோற்கடித்தாலும்*
*எப்போ துமே நாம் தோற்றவர் அல்லர்.*

*கோழைகள் அல்ல நாம்*
*மனோதிடத்துடன்*
*மரணத்தை எதிர்கொள்வோம் - கடந்த*
*காலங்களில் மாய்ந்தது போல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம் யாவர்க்கும் பொதுவானதுவே!

மரணம் எம்மை வீழ்த்தாது
மரணம் அவர்களையே வீழ்த்தும் - நாம்
மரணமேயற்ற மனிதர்கள்.

இப்பாதக ஆட்சியாளரின் வாழ்வு
நிரந்தரமானால் நாமும்
நிரந்தரமாயிருப்போம் - யாருமே
நிரந்தர மானவரல்ல.

எம்மை இந்த சோதனைக் களத்தில்
கண்டு மகிழ்கின்ற இவரை மரணம்
கண்டு கொள்வதில்லையா கூறும்.

அல்லாஹ் மீது ஆணை !
இதற்குப் பின்னரும் பயந்து
தாமதியாது குதிரை மீதேறுவோம்!
திருகை போல் வளைந்து வட்டமிட்டு
எதிரிகளை மையப்படுத்தி அவரை
திக்குமுக்காடச் செய்வோம் !

இது எந்தன் தந்தை தந்த வழி !
இது எந்தன் பாட்டன் தந்த வாக்குறுதி !

(நீங்கள் முடிவெடுத்த) உங்களுடைய காரியத்தையும் உங்களுடைய இணையாளர்களையும் ஒன்று கூட்டி முடிவு செய்யுங்கள். பின்னர் உங்களுடைய காரியம் உங்களிடம் மறைமுகமாகவும் இருக்க வேண்டாம். பின்னர் (அம்முடினை) என்னில் நிறைவேற்றி விடுங்கள். எனக்கு நீங்கள் காலதாமதம் கொடுக்க வேண்டாம். (10:71)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமாக என்னுடைய இரட்சகனும் உங்களுடைய இரட்சகனுமாகிய அல்லாஹ்விமீது நான் நம்பிக்கை வைத்து விட்டேன் (பூமியின்மீது) ஊர்ந்து திரியும் எந்த ஜீவராசியாயினும் அதன் முன்னெற்றி உரோமத்தை அவன் பிடித்துக் கொண்டே தவிர இல்லை. நிச்சயமாக என் இரட்சகன் நேரான வழியின்மீது இருக்கின்றான். (11:56)

இறைவா! வானநீரை அவர்களுக்குத் தடுத்துக் கொள்வாயாக! யூசுப் (நபியின்) காலத்தில் ஏற்பட்ட வரட்சியை ஏற்படுத்துவாயாக. இரக்கமற்ற ஆட்சியாளனை ஏற்படுத்தி முஸப்பரா எனும் பாத்திரத்தினால் அவர்களுக்கு நீர் புகட்டுவாயாக. அவர்கள் எம்மைப் பொய்ப்பித்து எம்மை இழிவுறச் செய்துள்ளார்கள்.

நீயே எங்கள் இரட்சகன் உன்மீது நம்பிக்கை வைத்தோம் இன்னும் உன் பக்கமே நாங்கள் மீண்டோம். அன்றியும் உன் பக்கமே திரும்புதல் இருக்கின்றது. (60:04)

அவர்கள், தாங்கள் தெரியாமல் செய்து விட்டோம் என நழுவிவிட முடியாதவாறு அர்த்தமுள்ள மற்றுமோர் உரையை நிகழ்த்திவிட்டு பெருமானாரின் (அல்-முர்தஜஸ் என அழைக்கப்பட்ட) குதிரைமீதேறி விரைந்தார்கள்.

## சொல்மழைக்குப் பிரதியாக அம்புமழை

அப்போது அவர்களை முன்னோக்கி வந்த உமர் இப்னு ஸஅத் தன் பணியாள் துறைதை நோக்கி "யா துறைத்! உன் போர்க் கொடியை ஏற்றிவிடு" எனக் கூறிவிட்டு வில்லை ஏற்றி அம்பைக் குறிபார்த்து "முதலில் ஹுஸைனை நோக்கி அம்பெய்தவன் நான் என அமீரிடம் சாட்சி சொல்லுங்கள்" எனக் கூறி அம்பெய்த போது அவனது கூட்டம் அவனைத் தொடர்ந்து அம்பு மழை பொழிந்தது. இதனைக் கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமாம் ஹுஸைன் அவர்கள் "என் சகாக்களே! இறைவன் உங்களுக்கு அருள் புரிவானாக! இதோ எதிரிப்படையின் அம்புகள்" எனக் கூறினார்கள்

பகல்வேளை! யுத்தம் உக்கிமடைந்தது. புழுதி பறந்தது. எதிரிகள் கடுமையான தாக்குதலைத் தொடர்ந்தனர். புழுதி சற்று ஓய்ந்தபோது இமாமின் அன்பர்கள் சுமார் ஐம்பது பேர் வீழ்ந்து கிடந்தனர். அப்போது தமது அருள் நிறை தாடியில் கைதட்டிய இமாம், "இறைவனுக்கு சந்ததி உண்டெனக் கூறிய எஹுதிகள்மீது இறைவனின் கோபம் அதிகரித்தது. முக்கடவுள் கற்பித்த நஸாராக்கள்மீது இறைவனின் கோபம் அதிகரித்தது. சூரியனையும் சந்திரனையும் தோத்திரம் செய்த நெருப்பு வணங்கிகள் மீது இறைவனின் கோபம் அதிகரித்தது. நபியின் மகளின் குமாரரைக் கொன்றொழிக்க முனைந்துள்ள கூட்டத்தின்மீது அல்லாஹ்வின் கோபம் அதிகரித்து விட்டது. நான் இரத்தத்தில் துவண்டாலும் அவர்கள் என்னிடம் வேண்டி நிற்பதற்கு நான் இறைவனைச் சந்திக்கும்வரை பதிலளிக்கவே மாட்டேன்" என்றார்கள்.

பின்னர் ஒருவர் பின் ஒருவராக போராட ஆரம்பித்தனர். போர்க்களம் புறப்பட முனைந்த ஒவ்வொருவரும் இமாமிடம் அஸ்ஸலாமு அலைக்கும் யாஅபாஅப்தில்லாஹ் எனக் கூறி விடைபெற, 'வஅலைக்கஸ்ஸலாம்' என அவர்களுக்கு ஹுஸைன் (அலை) மறுமொழி பகிர்ந்து நாம் உங்கள் பின்னால் நிற்கின்றோம் எனக் கூறி வழியனுப்பிவிட்டு,

> ஆகவே அவர்களில் தங்கள் இலட்சியத்தை (வீர மரணத்தை) அடைந்து விட்டவரும் இருக்கின்றனர். அவர்களில் (அதற்காக) எதிர்பார்ப்பவரும் இருக்கின்றனர். (தங்கள் வாக்குறுதியில்) அவர்கள் மாறிவிடவே இல்லை. (33:23)

என ஓதினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூபாவாசிகள் பலரை ஹுஸைனின் போராளி ஒருவர் கொன்றொழித்தார். அன்றைய களநிலவரம் பற்றியும் தமக்கேற்பட்ட நெருக்கடிகள் பற்றியும் கூபாவாசி ஒருவர் இவ்வாறு வர்ணிக்கின்றார்:

"உறுதிமிக்க கறுப்புநிற கைப்பிடி வாள்களினால் ஒரு கூட்டம் எம்மீது அடர்ந்தேறி குதிரையின்ால் இடப்புறம் வலப்புறமாக பந்தாடியது. உயிர்கள் அழிவைத் தேடின. காப்புக் கிடையாது. பண ஆசை அவர்களிடம் காணப்படவில்லை. இதற்கும் மரணத்திற்கும் தடையாக எதுவும் காணப்படவில்லை. ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் எனும் நோக்கமும் அங்கு காணப்படவில்லை."

இது பற்றி வர்ணிக்கின்றார் ஒரு கவிஞர்.

*கூட்டத்தைத் தடுத்துநிறுத்த*
*ஒரு கூட்டம் அழைத்தபோது*
*குதிரைகள் மிதித்தும் இழுத்தும் மிரண்டன.*
*உள்ளங்கள் கவசம் அணிந்துகொண்டன.*
*ஆன்மாக்களோ செல்லவிடாது உதிர்ந்து போயின.*

## இருளிலிருந்து ஒளியை நோக்கி...

இப்போது உமர் இப்னு ஸஅதை அவரது அணியைச் சேர்ந்த ஹுர் இப்னு எஸீத் ரியாஹி சந்தித்து, "இந்த மனிதரையா நீர் கொலைசெய்யப் போகின்றீர்?" எனக் கேட்டார். "அல்லாஹ் மீது ஆணையாக கையால் அழித்து தலைதெறிக்கப் போராடுவது மிகவும் இலகுவானதாகும்" என்றார் இப்னு ஸஅத். அப்போது "உமக்குத் தெரிவிக்கப்பட்டது பற்றி நீர் திருப்தியுடனுள்ளீரா?" என வினவினார் ஹுர். "விடயம் என்னுடையதாயிருப்பின் நான் நினைத்தவாறு செய்யலாம். ஆனால் விடயம் உமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவருடையது. அதனை அவர் ஏற்கவில்லை" என்றார் இப்னு ஸஅத்.

இந்நிலையில் ஹுர் மக்கள் மத்திக்குச் சென்று மெதுமெதுவாக இமாம் ஹுஸைனை அண்மிக்கலானார். இதனைக் கண்ணுற்ற முஹாஜிர் இப்னு அவ்ஸ், "என்ன செய்யப் போகின்றாய்? அவரைத் தாக்கப் போகின்றாயா?" என வினவினார். அதற்குப் பதிலளிக்காத ஹுர் நடுநடுங்கி நின்றார். இதனைக் கண்ணுற்ற முஹாஜிர், "உமது விடயம் சந்தேகத்திற்குரியதாக உள்ளதே. அல்லாஹ் மீது ஆணையாக, இவ்வாறான உமது நிலையை ஒருபோதும் கண்டதில்லையே. கூபாவின் மாவீரர் யார் என என்னிடம் வினவினால் உம்மை விட யாரையும் என்னால் விளிக்க முடியாது. ஆனால் இப்போதோ உம்மை நான் எப்படிப் பார்க்கின்றேன்?!" என்றார்.

பதிலளித்த ஹுர் இவ்வாறு கூறுகின்றார்: "அல்லாஹ்மீது ஆணையாக நான் சொர்க்கமா, நரகமா எனும் தீர்வுக்கு நடுவே நிற்கின்றேன். நான் வெட்டப்பட்டாலும் எரிக்கப்பட்டாலும் சொர்க்கத்திற்குப் பதிலாக எதனையும் நான் தெரிவுசெய்ய மாட்டேன்" என்றார்கள்.

பின்னர் ஹுஸைனை நோக்கி தன்னுடைய குதிரையைச் சாய்த்துச் சென்று, "இறையோனே! உன்னிடம் தெளபாச் செய்கின்றேன். என்னை மன்னிப்பாயாக! உனது நேசர்களதும் உனது நபியின் மகளின் பிள்ளைகளதும் உள்ளங்களை அச்சமுறச் செய்துவிட்டேன்" எனப் பரிதவித்தார்.

ஹுஸைனை அவர் அண்மித்தபோது "நீ யார்?" என என இமாம் ஹுஸைன் வினவினார்.

அதற்கு ஹுர் "அல்லாஹ் என்னை தங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணமாக்கட்டும். நீங்கள் திரும்பிச் செல்வதையும் பாதையில் பயணிப்பதையும் தடுத்து நிறுத்திய உங்கள் நண்பன். இவ்விடத்தில் உங்களை நிம்மதி இழக்கச் செய்தவன். நீங்கள் தெரிவித்த விடயத்தை (அந்தக்) கூட்டம் நிறைவேற்றும் என நான் நினைக்கவில்லை.

"நீங்கள் கொண்டிருக்கும் இத்(தனிச்) சிறப்பு அவர்களிடம் இல்லை. நான் செய்ததை விட்டும் பாவ மன்னிப்புக் கோரி நிற்கின்றேன். அதற்காக நான் மீட்சி பெறலாமா?" எனக் கூறிப் பரிதவித்தார்.

"ஆம், உம்மை இறைவன் மன்னிப்பானாக! (குதிரையிலிருந்து) கீழிறங்கு" என்றார்கள் ஏந்தல் ஹுஸைன் அவர்கள்.

"உங்களுக்காக நான் ஒரு சிறந்த குதிரை வீரனாக அவர்களை எதிர்த்து குதிரையிலும் இறுதிவரை போராடப் போகின்றேன்" என ஹுர் வேண்டிநிற்க,

"இறையருள் உன்மீது உண்டாகட்டும். நீர் விளங்கியவாறு செய்து கொள்ளும்" என்றார்கள் செம்மல் ஹுஸைன் அவர்கள்.

இமாம் ஹுஸைனுக்கு முன் ஹுர் இப்னு ரியாஹி இவ்வாறு கூறினார்: "கூபாவாசிகளே! ஹுபல் இபர் (எனும் சிலைகளை) உங்கள் தாயாக வைத்துள்ள நீங்கள் உங்களிடம் இந்த ஸாலிஹான அடிமை வரவழைக்கப்பட்டால் அவரிடம் நீங்கள் சரணடைவீர்களா? உங்களை நீங்களே அழித்துக் கொள்ள எண்ணியுள்ளீர்களே. அவரைக் கொள்வதற்காக முனைந்துள்ளீர்களே. நகர முடியாதவாறு அவரை அடக்கி வைத்துள்ளீர்கள். அவரது கோபத்துக்கு ஆளாகியுள்ளீர்கள். பரந்து விரிந்துகிடக்கும் இறைவனின் பூமியில் அவர் வெளிப்பட்டுச் செல்லத் தடை விதித்து அனைத்துப் பகுதிகளையும் சூழ்ந்து கொண்டுள்ளீர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கென எப்பயனையும் அடைந்துகொள்ளவோ கெடுதியைத் தடுத்துக் கொள்ளவோ முடியாத அடகு வைக்கப்பட்ட ஒரு கைதியைப் போலல்லவா அவர் காணப்படுகின்றார்.

"எஹூதிகளும் நஸாராக்களும் நெருப்பு வணங்கிகளும் கறுப்பு பன்றிகளும் நாய்களும்கூட நீர் அருந்தும் ஓடும் புராத் நதிக்குச் செல்லாதவாறு அவரையும் அவரது பெண்கள் குழந்தைகளையும் முடக்கி வைத்துள்ளீர்களே, இதோ அவர்கள் தாகத்தால் படும்பாடுதான் என்ன முஹம்மதிற்கும் அவரது சந்ததிகளுக்கும் நீங்கள் செய்யும் துரோகம் இது. கடுமையாகத் தாகிக்கும் நாளில் உங்களுக்கு இறைவன் நீர் புகட்டாதிருக்கட்டும்" என்றார் ஹூர்.

அங்கிருந்தோர் அம்புகளால் ஹூர்ரைத் தாக்க ஆரம்பித்தனர். அவற்றை எல்லாம் தாங்கியவாறு, இமாம் ஹூஸைனின் சமுகத்தில் போராட அனுமதி வேண்டி நின்றார் ஹூர். அவர்கள் "பெருமானாரின் பிள்ளையே! உங்கள் மீது போர் தொடுக்க முதலில் கிளம்பிய எனக்கு உங்கள் முன் சென்று (எதிரிகளை எதிர்கொள்ள) முன்னணி உயிப் பலியாக அனுமதி அழியுங்கள். உங்கள் பாட்டனாருடன் நாளை நான் முதலில் கைலாகு செய்ய வேண்டும்" எனக் கோரி, இமாமின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட மாவீரர் ஹூர்,

*நிச்சயமாக நான் ஹூர் (சுதந்திரமானவன்)*
*விருந்தினரின் தரிப்பிடம்.*

*அநீதியாளர் நிறை இப்பூமியில்*
*நீதியை நிலைநிறுத்த*
*நின்று போராடுமிந்த*
*சிறந்த மனிதருக்காய் - உங்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிரங்களைப் பந்தாடுவேன்.*

*அநீதி நிறைந்தவர் குறைந்தவர்*
*கண்டுகொள்ள மாட்டேன்.*
*உங்கள் சிரங்களைக் கொய்து*
*உங்களைக் கொன்றொழிப்பேன்*

எனக் கவி பாடியவாறு போர்க்களம் இறங்கினார்.

போர் தொடுத்து நாற்பதுக்கும் அதிகமானவர்களை ஹுர் கொன்றொழித்தார். அவரது குதிரையை அவர்கள் காயப்படுத்தியதும் தரைவழித் தாக்குதலை மேற்கொண்டார். எதிரிகள் அடர்ந்தேறி அவரைக் கொன்றனர். இரத்தம் பீறிட்டு பூமியில் விழுந்த ஹுர்ரை இமாம் ஹுஸைன் (அலை) அவர்களது முகத்தில் காணப்பட்ட உதிரம், மண் என்பவற்றைத் துடைத்து "உமது தாய் உமக்கு ஹுர் என நாமம் சூட்டியது போல் நீர் ஓர் சுதந்திரப் புருஷன். உமக்கு சுபசோபனம்! சுபசோபனம்! நீர் வீரமரணம் எய்துவிட்டீர்" எனக் கூறியபின் அவரது உறவினர் அவரைச் சுமந்து சென்று நல்லடக்கம் செய்தனர்.

## தந்தை வழியில் தனயன்

ஹுர்ரைத் தொடர்ந்து இறை நேசராகிய புரைர் இப்னு ஹமதானி போர்க்களம் புகுந்தார். "பெருமானாரின் பிள்ளைகளையும் அவர்களது சந்ததியின் எச்ச சொச்சங்களையும் கொலை செய்தவர்களே! என்னை நெருங்கி வாருங்கள்" எனக் கோஷமிட்டவராக களம் புகுந்தார். சுமார் முப்பது பேரைக் கொன்றொழித்தார். இவர்களில் எஸீத் இப்னு முகப்பல் (அல்லது முஅக்கல்) முன்வந்து அவர்களுக்கிடையே உண்மை பொய்மை தெளிவாகும் அறைகூவலு(முபாஹலாவு)க்கு அழைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுக்க முற்பட்டார். அவரை புரைர் கொன்றொழித்த போது புரைரையும் அவர்கள் கொன்றொழித்தனர்.

தொடர்ந்து களம்புகுந்த முஸ்லிம் இப்னு அவ்ஸஜா கஷ்டங்கள். சோதனைகள பலவற்றை தாங்கியவாறு தாக்குதலைத் தொடுத்து பலரைக் கொன்றொழித்துவிட்டு நிலத்தில் வீழ்ந்தபோது இமாம் ஹுஸைனோடு ஹபீப் இப்னு மழாஹிரும் சென்றார். அங்கு முஸ்லிம் இப்னு அவ்ஸஜா உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். அவரை விளித்த இமாம் "இறைவன் உமக்கு நல்லருள் புரிவானாக யா முஸ்லிம்" எனப் பிரார்த்தித்தார்கள்.

> ஆகவே, அவர்களில் தங்கள் இலட்சியத்தை (வீர மரணத்தை) அடைந்து விட்டவரும் இருக்கின்றனர். அவர்களில் (அதற்காக) எதிர்பார்ப்பவரும் இருக்கின்றனர் (தங்கள் வாக்குறுதியில்) அவர்கள் மாறிடவே இல்லை. (33:23)

பின்னர் ஹபீப் இப்னு மழாஹிர் அவரை நெருங்கி, "முஸ்லிமே, இறைவன்மீது சத்தியமாக உமது வீழ்ச்சி எனக்கு சோகத்தைத் தோற்றுவித்துள்ளது. சொர்க்கத்தைக் கொண்டு உமக்கு சுபசோபனம் கூறுகின்றேன்" எனக் கூறியபோது, தாழ்ந்த குரலில், "அல்லாஹ் உமக்கு நன்மையைக் கொண்டு சுபசோபனம் கூறுவானாக" என்றார் முஸலிம் இப்னு அவ்ஸஜா அவர்கள். பதிலுக்கு ஹபீப் இப்னு மழாஹிர் "எனக்கு சந்ததிகளின் விடயம் இல்லாதிருப்பின் என்மீது உமக்குத் தேவையான அனைத்தையும் நீர் சிபாரிசு செய்வதை நான் நிச்சயம் விரும்பி இருப்பேன்" என்றார்கள். அப்போது அவரை விளித்த முஸ்லிம் (ஹுஸைனைச் சுட்டிக் காட்டி) இறுதிவரை இவரோடு நின்று (எதிரி)களோடு போராடு என வேண்டி நிற்க அதனை ஹபீப் சிரமேற் கொண்டு ஏற்றுக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எதிரிகள் மரணிக்க மரணிக்க*
*உயிரோடு இருந்து இவர்கள் உதவினர் உமக்கு.*

*மரணத்தை இவர்கள் சுவைக்கும்*
*தருணம் வரைக்கும் - உம்மை*
*மரணம் சந்திக்காமல் இவர்*
*முன்னே நின்று காத்தனர்*
*உதவி புரிந்தனர்*
*அன்பானவர் சொன்ன*
*அன்பான உபதேசம் காரணமாய்.*

உமர் இப்னு ஸஅதின் நண்பர்கள் முஸ்லிம் இப்னு அவ்ஸஜைக் கொன்றொழித்துவிட்டோம் எனக் கொக்கரித்தனர். அப்போது முஸ்லிமின் அயல் வீட்டுப் பெண்மணி 'தலைவா இப்னு அவ்ஸஜா' எனக் கதறி அழுதாள்.

தந்தையின் வீரமரணத்தைக் கேள்விப்பட்ட அவரது புதல்வன் அழுதவாறு தாயிடம் ஓடோடிச் சென்றான். அப்போது 'என்ன அழுகை?' என அவள் ஆட்சேபித்தபோது, "நான் போராடப் போகின்றேன்" எனக் கூறியபோது அவனுக்கு அவள் போர்வாளை அணிவித்து "என் புதல்வனே! கூடாரத்தின் வெளியே ஈட்டிகளை எதிர்கொண்டு போராடு" எனக் கூறி அனுப்பினாள். போர்க்களம் செல்ல வெளியாகி ஈட்டியைத் தூக்க முயற்சித்தும் முடியவில்லை. அது பூமியின் மீது இழுபட்டுச் செல்வதைக் கண்ட கண்மணி ஹுஸைன் அவர்கள், நிச்சயமாக இவ்வாலிபரின் தந்தை போர்க் களத்தில் உயிப்பலியானார். இவரது தாய் இவர் போராடுவதை விரும்பமாட்டாள் எனக் கூறியதும் அச்சிறுவன் "என் தலைவரே, நிச்சயமாக என் தாயே எனக்குரிய போருக்கான தலைக் கவசத்தை அணிவித்தவர்" எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறி கவிபாடி போராட முற்பட்டார்.

எந்தன் தலைவர் ஹுஸைன் - மிகச்
சிறந்த தலைவர்
நன்மாராயமும் எச்சரிக்கையும் செய்த
ஏந்தல் நபியின்
உள்ளத்தின் உவகை கொண்டவர்.
இமாம் அலியினதும்
இனிய பாத்திமாவினதும்
கனிவான பிள்ளை!

சூரியன் போன்ற உதயம் அவர்
பூரணச் சந்திரனின் கண்ணிய
பிரகாசம் அவர்.

அவர் கொலை செய்யப்படும் வரை போராடினார். அவரது தலையைத் துண்டித்து ஹுஸைனின் படையை நோக்கி வீசினர். அவரது தலையை அவரது தாய் கையில் எடுத்து "என் அன்பு மகனே! என் உள்ளத்தை உவகை கொள்ள வைத்தாய். என் கண்குளிர்ச்சியே! நீ நன்மை செய்தாய்" எனக் கூறினாள். தன் தவப் புதல்வரின் தலையை வைத்து விட்டு கூடாரத்தின் தூணைத் தூக்கி

சத்தியவான் எந்தன் தலைவனுக்கு
சக்தியற்ற, இளைத்துப் போன
வறுமையே வாழ்வாய் நிறைந்த
பெறுமதியே இல்லா மூதாட்டி நான்!

சத்தியத்தைக் காக்கும் இப்போரில்
பாத்திமாவின் மகனோடு இணைந்து
உத்தமமாய் போராடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உன்னவரால் ஈடுகொடுக்க முடியாதபடி*

எனப் பாடினாள் அம்மூதாட்டி.

அவளை அங்கிருந்து செல்லுமாறு இமாம் ஹுஸைன் பணித்து அவளுக்காக பிரார்த்தனையும் செய்தார்கள்.

இமாம் பயணித்தபோது கிறிஸ்தவராயிருந்து அவர் மூலம் இஸ்லாத்தைத் தழுவிய வஹப் இப்னு அப்தல்லாஹ் கல்பியும் அவரது மனைவியும் அவரது தாயும் இவர்களோடு பயணித்தனர். இப்போது இவரும் போர்க்களம் புறப்படுகின்றார். இவரை நோக்கி இவரது தாய் "என் புதல்வரே றசூலுல்லாஹ்வின் மகளின் புதல்வருக்கு உதவி செய்ய எழுந்திரு" எனப் பணித்தார்.

"நான் மாறு செய்யாது அப்படியே செய்கின்றேன் தாயே" எனக் கூறி அவர் பின்வரும் பைத்தைப் பாடிப் புறப்பட்டார்.

*தெரியாதா என்னை உங்களுக்கு - நான்*
*இப்னுல் கல்பி*

*நான் யார்? என்பதையும் எனது போராட்டம்*
*எப்படிப்பட்டது என்பதையும் பொறுத்திருந்து*
*பாருங்கள்.*

*சண்டையின்போது எனது ஆட்ட ஓட்டம் பற்றித்*
*தெரிந்து கொள்வீர்கள்*

எனக் கூறி பலரை மாய்த்துவிட்டு தன் தாயிடம் மீண்டும் வந்து, "தாயே பொருந்திக் கொண்டாயா?" எனக் கேட்க,

"நீர் ஹுஸைனின் சன்னிதானத்தில் உயிப் பலியாகும் வரை உன்னைப் பொருந்திக் கொள்ள மாட்டேன்" என்றாள் அவள். அவரது மனைவி "பெரிய கவலையை நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தி விடாதீர்கள்" என்றாள். ஆனால் தாயோ, "அவளது பேச்சைப் பொருட்படுத்தாதே. மாநபியின் மகளின் பிள்ளையின் சமுகத்தில் போராடு. அவர்களது பாட்டனாரின் மன்றாட்டத்தைப் பெற்றுக் கொள்வாய்" என்றாள்.

தாயின் உத்தரவைத் தலைமேற்றாங்கிய அவர் போர்க் களம் புகுந்து பத்தொன்பது குதிரை வீரர்களையும் இருபது தரைப்படை வீரர்களையும் மண்கவ்வச் செய்து அவர்களது கைவிரல்களையும் துண்டித்தார். கூடாரத்தின் தூணைப் பிடித்தவாறு அவரது மனைவி அவரை நோக்கி "என் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும். றசூலுல்லாஹ் வின் சங்கைமிக்க நல்லோருடன் சேர்ந்து போராடுங்கள்" எனக் கூற, அவளைப் பெண்கள் பக்கம் திரும்பிச் செல்லு மாறு அவளது ஆடையைப் பிடித்தவாறு கூற, "நானோ திரும்பிச் செல்ல மாட்டேன். உம்மோடு மரணிப்பேன்" என அவள் கூற, "அவர்கள் போராடச் சொன்னபோது தடுத்த நீ இப்போது போராடுமாறு தூண்டுகின்றாயா?" எனக் கேட்டார். பதிலுக்கு "யா வஹப், 'ஆதரவற்று குறைந்த ஆதரவாளர்களே உள்ளனர். எனக்கு உதவுவோர் ஒத்தாசை புரிவோர் உண்டா?' என இமாம் ஹுஸைன் அழைத்ததிலி ருந்து நான் ஓர் இலட்சியத்துடன் காத்திருந்தேன்" என்றாள்.

பின்னர் வஹப் ஹுஸைனிடம் "தலைவரே, இவளைத் திருப்பி அனுப்பி விடுங்கள்" எனக் கோரியபோது இமாம் ஹுஸைன் "அஹ்லுல்பைத்திடமிருந்து அழகிய நற்கூலி கிடைக்கப் பெற்றுள்ளீர்கள். அல்லாஹ் உமக்கு நல்லருள் புரியட்டும். பெண்களிடம் திரும்பிச் செல்" என்றார்கள். அவள் அங்கிருந்து நகர்ந்தபின் வஹப் உயிப்பலியாகி விட்டார்கள். அவரது சிரசை எதிரிகள் ஹுஸைனின் படைமுன் வீசினர் அப்போது அவரது தாய் அதனைக் கையிலெடுத்து முத்தமிட்டு அவரது முகத்திலிருந்த உதிரத்தைத் தடவி "என் அருந்தவப் புதல்வரே! ஹுஸைனின் சமுகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வெட்டுண்டு) வீர மரணத்தினால் என் முகத்தை இலங்கச் செய்த இறைவனுக்கே எல்லாப் புகழும்" எனக் கூறினாள். பின்னர் சிரசை வைத்துவிட்டு கூடாரத்தின் தூணைப் பிடித்துநின்ற அவளது முகம் கவலை பொங்கக் காட்சி தர, "வஹபின் தாயே, நீரும் உமது புதல்வரும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் இருப்பீர்கள்" என ஆறுதல் கூறி அவர்களைத் திரும்பிச் செல்லுமாறு இமாம் ஹுஸைன் வேண்டினார்கள்.

தன் கணவனின் முகத்திலிருந்த இரத்தம் மண் ஆகியவற்றைத் துடைத்துவிட்டு "சொர்க்கம் உமக்குக் கிடைக்கட்டும்" என வாழ்த்துக் கூறிவிட்டு திரும்பிச் செல்லும்போது அவளைக் கண்ட ஷிம்ர் என்னும் கொடியோன் தன் பணியாளிடம் அவளை அடித்துக் கொள்ளுமாறு கட்டளையிட்டபோது அவள் அவ்வாறே கொலை செய்யப்பட்டு ஹுஸைனின் போராட்டத்தில் முதன்முதலில் உயிப்பலியாகிய பெண்மணி எனும் சிறப்பைப் பெற்றுக் கொண்டாள். இவ்வாறான நிலை தொடர்ந்து மதிய நேரமாகியபோது அபூ தமாமதுஸ் ஸெய்தாவி என்பவர் இமாமிடம் சென்று "எமது ஆண்மக்கள் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும். அவர்(எதிரி)கள் உங்களை அண்மித்துள் ளனர். உங்களுக்கு முன்பாக நான் உயிர்நீக்குமுன் அவர்களுடன் போராட்டத்தைத் தொடுக்காதீர்கள்" எனக் கூறி, "இந்தத் தொழுகையை (ளுஹரை) உங்களோடு தொழுதேன் எனும் நிலையில் அல்லாஹ்வைச் சந்திக்க நான் ஆசைப்படுகின்றேன்" என்றார்கள்.

விண்ணகத்தை நோக்கிய இறைஜோதி இமாம் ஹுஸைன் "தொழுகையை நினைவூட்டினீர். இறைவன் உம்மை அவனை நினைவூட்டித் தொழுதவராக ஆக்கி அருள்வானாக" எனப் பிரார்த்தித்து, "இது தொழுகை நேரம் (அவ்வல் வக்த்). நாம் தொழுவதற்காக அவர்களைச் சற்று தாமதிக்குமாறு கேளுங்கள்" என்றார்கள். இமாம் ஹுஸைன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதான் கூறியதாகவும் அவர்களது முஅத்தினை அதான் கூறப் பணித்ததாகவும் இருவிதமாகக் கூறப்படுகின்றது. பின்னர் இமாம் ஹுஸைன் அவர்களை நோக்கி "இஸ்லாமிய ஷரீயாவை மறந்து விட்டீர்களா? இப்னு ஸஅதே உமக்கு இழிவு உண்டாகட்டும்" என்றார்கள். "நாமும் உமது சகாக் களும் தொழுவதற்காக சண்டையை சற்று தாமதப்படுத்தி பின்னர் எமது போராட்டத்திற்கு வருவோம்" என்றார்கள்.

அவர்களுக்குப் பதிலளிக்க இப்னு ஸஅத் வெட்கித் தான். "உமக்குத் தெரிந்தவாறு தொழும். ஹுஸைனே, அல்லாஹ் உமது தொழுகையை ஏற்கமாட்டான்" எனச் சப்தமிட்டான் ஹுசைன் இப்னு நமீர் என்னும் வம்பன் (அவன் மீது சாபமுண்டாகட்டும்!).

"பெருமானாரின் பிள்ளையின் தொழுகை ஏற்கப்படுவ தில்லை! குடிகாரனாகிய உமது தொழுகை ஏற்கப்படு வதா? உன்மீது நாசமுண்டாகட்டும்" என பதிலளித்தார்கள் ஹபீப் இப்னு மழாஹிர் அவர்கள்.

இமாம் ஹுஸைன் அவர்கள் ஸுஹைர் இப்னு அல் கய்ன், ஸயீத் இப்னு அப்தல்லாஹ் ஆகியோரிடம் தாம் தொழப் போவதாகக் கூறி, தம் முன்னால் (அரண் செய்து) நிற்குமாறு பணித்து தமது சகாக்களுடன் ஸலாதுல் கௌப் (ஆபத்தின்போதான) தொழுகையை நிறைவேற்றியபோது முன்னே நின்ற ஸஅதைக் குறிபார்த்து அம்புகளை எய்தினர் எதிரிகள். இமாம் ஹுஸைன் இடம் வலம் என அதனைத் தடுத்தும் அது பயனற்றுப்போனது. அப்போது ஸஅத் "இறைவா! ஆது ஸமூது கூட்டத்தார்களை சாபமிட்டது போன்று இவர்கள் மீதும் சாபத்தை உண்டாக்கு. எனது ஸலாத்தை உனது நபிக்கு எத்திவை. எனக்கு ஏற்பட்டுள்ள காயங்களினால் நான் படும் அவஸ்தை பற்றி அவருக்குத் தெரியப்படுத்து. இவை உனது நபியின் சந்ததிகளின் உதவிக்காகவே" எனக் கூறி மரணித்து விடுகின்றார். (அவர் மீது இறையருள் உண்டாகட்டும்!).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதி கேட்டுக் களமிறங்கும் ஒழுக்கநெறி

பின்னர் ஹபீப் இப்னு மழாஹிர் களமிறங்க கண்மணி ஹுஸைனிடம் பிரியாவிடை பெற்று போராட ஆரம்பிக்கின்றார்.

*நான் ஹபீப் -*
*என் தந்தையார் மழாஹிர்.*
*நான் குதிரைப்படை வீரன் !*
*நான் சமர்களில் ஒரு தீரன் !*

*நீங்களோ எண்ணிக்கையில் ஆயிரமானோர்*
*ஆளணியில் அதிகம் கொண்டோர்.*

*நாங்களோ உங்களை விடவும்*
*வாக்குறுதியை நிறைவேற்றுவதிலும்*
*பொறுமை காப்பதிலும் உன்னதமானோர்.*
*நீங்களோ அளித்த வாக்குறுதிக்கு*
*மாறுசெய்வோர் ! அதனை நிறைவேற்ற*
*மறுப்போர் !*

*நாங்களோ உயரிய ஆதாரத்தையும்*
*சீரிய தெளிவையும் கொண்டோர்.*

எனப் பாடியவாறு புறப்படுகின்றார்.

குதிரை வீரர்கள் பலரை மண்கவ்வச் செய்துவிட்டு ஹபீப் உயிர்ப்பலியானபோது இமாம் ஹுஸைனின் முகத்தில் ஒருவகை மாற்றங் காணப்பட்டது.

"ஹபீப், ஒரே இரவில் குர்ஆனை ஓதிமுடிக்கும் உனக்குரிய கூலியை இறைவன் வழங்குவானாக" எனப் பிரார்த்தித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் ஸுஹைர் இப்னு அல்கைன் போர்க்களம் புகுந்து சமர் செய்து பலரை வீழ்த்தி விட்டு இமாமிடம் மீண்டும் வந்து அன்னாரின் புயத்தைத் தடவி,

*யா இமாம் !*
*நீங்கள் நேர்வழி நிற்பவர் !*
*எங்களுக்கு நேர்வழி காட்டுபவர் !*
*உங்களுக்கு எந்தன்*
*ஆன்மா இன்று சமர்ப்பணம் !*

*இன்றைய தினம்*
*உங்கள் அருமைப் பாட்டனார் நபியையும்*
*அருமைத் தந்தை அலி முர்தழாவையும்*
*அருமைச் சோதரர் ஹஸனையும்*
*நிச்சயம் நான் சந்திப்பேன் !*

எனும் பிரியாவிடைக் கவிபாடி மீண்டும் களமிறங்கினார்கள். பலரைப் பதம்பார்த்து கடும் போராட்டத்தின்பின் வீரமரண மடைந்தார்கள் ஹஸ்ரத் ஸுஹைர் அவர்கள்.

இவரிடம் விரைந்த இமாம், "யா ஸுஹைர், அல்லாஹ் உம்மைவிட்டும் தூரமாக மாட்டான்" என துஆ செய்து, "உம்மைக் கொன்றவர்களை குரங்கு கழுதைகளாக சபித்தவாறு சபிப்பானாக" என வேண்டினார்கள்.

ஆபிஸ் இப்னு ஷபீபுஷ் ஷாகிரி என்பவருடன் ஷாகிர் வம்சத்தைச் சேர்ந்த ஸுஸவ்ப்மௌலா என்பவரும் உடனிருந்தார். "ஸுஸவ்பே, நீர் இன்று என்ன செய்யப் போகின்றீர்?" என ஆபிஸ் வினவியபோது "நான் என்ன செய்யப் போகின்றேனா? றசூலுல்லாஹ்வின் மகளின் மகனுக்கு முன்பதாக உங்களுடன் களமிறங்கிப் போராடி நான் இன்னுயிர் நீக்கப் போகின்றேன்" என்றார் ஸுஸவ்ப்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரை நோக்கிய ஆபிஸ், "அப்படியே உன்னை நினைக்கின்றேன்" எனக் கூறி "அப்படியாயின் நானும் அவரது ஏனைய ஸஹாக்களும் உம்மைப் பற்றி எண்ணுவது போன்று அபீஅப்தல்லாஹ் முன் பிரசன்னமாகிக் கொள். இன்று (உகில்) செயல் நாளை (மறுமையில்) கணக்குப் பார்ப்பதேயாகும்" என்றார்.

இமாம் ஹுஸைன் முன் பிரசன்னமாகி அவர்களது ஆசிர்வாதத்தைப் பெற்று களமிறங்கிப் போராடி ஈற்றில் கொலையுண்டு ஷஹீதாகினார் ஸுஸவ்ப்.

இமாமிடம் ஆபிஸ் சென்று ஸலாம் கூறி, யா அபாஅப்தில்லாஹ், அல்லாஹ் மீது ஆணையாக பூமி மீது தூரத்திலுள்ளது அண்மையிலுள்ளது என எதுவும் உங்களைவிட கண்ணியமும் விருப்புக்குமுரியதாக எனக்கு கிடையாது உங்களுக்காக என்னிடம் என்னையும் என் உதிரத்தையும்விட கண்ணியத்திற்குரியது ஏதுமிருப்பின் உங்கள் நெருக்குதல் அல்லது கொலையைத் தடுக்கப் போராடுவேன். அஸ்ஸலாமுஅலைக்க யா அபாஅப்தில் லாஹ், நிச்சயமாக நான் உங்களது நேர்வழியிலும் உங்கள் பாட்டனாரின் நேர்வழியிலுமே உள்ளேன் எனக் கூறி வாளை ஏந்தி களத்தை நோக்கி நகர்ந்தார்.

கூபாவைச் சேர்ந்த ஒருவன் இவரைக் கண்டதும், "இவர் கறுப்புச் சிங்கம். இவர் ஸபீபின் மகன்" எனக் கூக்குரலிட்டான். "(என்னுடன் போரிட) யாருமுண்டா?" என அழைத்தார் ஆபிஸ். எவரும் முன்வராது போகவே, உமர் இப்னு ஸஅத் இவரை நோக்கிக் கல்லெறியுமாறு உத்தரவிட்டான். அதனைத் தொடர்ந்து நாலாபுறமுமிருந்தும் சரமாரியான கல்வீச்சு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. இதனால் அவரின் உடற்கவசமும் தலைக்கவசமும் கழன்றுவிழுந்தன. கவசமின்றி நின்ற அவரைக் அடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமைப்படுத்திய எதிரிகள், குற்றுயிராகும்வரை இடைவிடாது அடித்து படுகாயப் படுத்தி பின்னர் அவரைக் கொலைசெய்தார்கள் (ரிழ்வானுல்லாஹி அலைஹி).

அபூதர் கபாரியின் அடிமையாகவிருந்த ஜவ்ன் என்பவர் போர்புரிய அனுமதி கேட்டு நின்றார். பதிலளித்த இமாம் ஹுஸைன் "யா ஜவ்ன், என் அனுமதி உமக்கு வழங்கப்படுகின்றது. என்றாலும் நீர் எம்மிடம் மன அமைதி தேடி வந்தவர். உம் வழியில் உம்மைக் கஷ்டத்திற்குள்ளாக்கிக் கொள்ளாதீர்" எனக் கூறியபோது ஜவ்ன் இவ்வாறு பதிலளித்தார்: "றசூலுல்லாஹ்வின் புதல்வரே! மகிழ்ச்சியின் போது உங்களோடு சேர்ந்திருந்து, கஷ்டத்தின்போது உங்களை கைவிடுபவனாக நான் இருப்பதா? அல்லாஹ்வின் மீது ஆணையாக, நிச்சயமாக என் வாடை துர்நாற்றமும் எனது குலம் இழிவுடையதாகவும் என் நிறம் கறுப்பானதாகவும் உள்ளது. இதிலிருந்து விடுபட்டு சொர்க்கத்தின் வாடையைச் சுவாசிக்கின்றேன். என் வாடை நறுமணமாகி, என் குலம் சிறப்புற்று என் முகம் வெண்மையாகி உள்ளது. அல்லாஹ்மீது ஆணையாக, என் கறுப்பு உதிரம் உங்கள் உதிரத்தோடு கலக்கும்வரை உங்களைவிட்டுப் பிரிய மாட்டேன்" என்றார் ஜவ்ன்.

இமாம் ஜவ்னைப் போராட அனுமதித்த போது பின்வரும் கவி பாடி அவர் களம் புகுந்தார்.

*இந்தக் கறுப்பனின் அடியை*
*இந்த நிராகரிப்போர்*
*எங்கனம் பார்க்கப் போகின்றனர்?*
*எங்கனம் தாங்கப் போகின்றனர்?*
*அத்தனைக்கும் அது இடிபோல் விழும்.*

*அஹ்மத் நபியினது கோத்திரம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எங்கள் நாவாலும்*
*எங்கள் கரத்தாலும்*
*பாதுகாக்கப்படும் உண்மை.*

சுமார் இருபதிற்கும் அதிகமானவர்களின் உயிரைப் பதம்பார்த்த பின் இன்னுயிர் நீத்தார் அவர். அவரிடம் சென்ற இமாம் ஹுஸைன் அவர்கள் "யாஅல்லாஹ், அவரது முகத்தை வெண்மையாக்கி அவரது வாடையை நறுமண மாக்கி அவரை நல்லடியார்களோடு எழுப்புவாயாக. அவரை முஹம்மத் மற்றும் முஹம்மதின் சந்ததிகளுக்குமிடையே அறிமுகம் செய்துவைப்பாயாக" எனப் பிரார்த்தித்தார்கள்.

துருக்கி நாட்டைச் சேர்ந்த ஓர் அடிமை இவ்வாறு பாடி களமிறங்கினார்.

*நான் ஆர்ப்பரிக்கும் கடலாக*
*பொங்கி எழுவேன்*
*எந்தன் போராட்டம்*
*அனலாக விரைந்து வரும்.*
*ஆகாயமோ எந்தன்*
*அம்பினாலும் ஈட்டியாலும் நிறைந்துவிடும்.*
*எந்தன் கூர்மை கொள் வாளானது*
*பளபளவென ஜொலித் திலங்கும்*
*இந்தப் பொறாமை நிறை ஈனரின்*
*உள்ளம் சுக்குநூறாய் சிதறிப் போகும் !*

களமிறங்கி வீரப்போர் செய்து, எதிரிகள் பலரைத் தன் வாளுக்கு இரையாக்கியபின் குற்றுயிராய்க் கிடந்து துடிக்கும் அவ் அடிமையினைக் கண்ட கண்மணி ஹுஸைன் அவர்கள் அவரை அணைத்து அவர் கன்னத்தில் தன் கன்னத்தை வைத்து அழுதார்கள். அந்த அடிமை கண்விழித்து புன்முறுவல் செய்து நிரந்தரத் துயிலில் ஆழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹிராஜிஊன்).

தொடர்ந்து அம்ர் இப்னு காலித் அஸ்ஸெய்தாவி இமாமைப் பார்த்து "யா அபாஅப்தில்லாஹ், தங்களுக்கு நான் அர்ப்பணமாகட்டும். உண்மை உங்கள் சகாக்களோடுதான் உள்ளது. உங்களுக்கு மாறு செய்வதை வெறுக்கின்றேன். நீங்கள் தனியாக படுகொலையாகி விடுவீர்கள் என நான் எண்ணுகின்றேன்" எனக் கூறினார். அப்போது இமாம் ஹுஸைன் "இன்னும் சற்று நேரத்தில் நாம் உம்மை வந்தடைவோம். எனவே புறப்பட்டுச் செல்" என அறிவுரை பகர களமிறங்கிப் போராடி ஈற்றில் உயிர்ப்பலியாகி விட்டார் அஸ்ஸெய்தாவி அவர்கள்.

பின்னர் ஹழ்ழலா இப்னு அஸ்அதுஸ்ஸபாமி என்பவர் இமாம் ஹுஸைனை நோக்கிவரும் அம்புகளைத் தடுக்கும்வகையில் செயற்படலானார். இவரை நோக்கிய இமாம் ஹுஸைன் "இப்னு அஸ்அதே, அவர்களை உண்மையின் பக்கம் நீர் அழைத்தபோது அதற்கு மறுப்புக் கூறி வேதனை செய்வதை அவர்கள் தம்மீது கடமையாக்கிக் கொண்டனர்" எனக் கூறியபோது, "உண்மை சொன்னீர்கள். உங்களுக்கு என்னை அர்ப்பணமாக்குகின்றேன். என் சகோதரர்களை மறுமையில் சந்திக்க நாம் (போர்க்களம்) செல்ல வேண்டாமா?" என வினவினார்.

"ஆம், உலகம் அதிலுள்ளவற்றை விடவும் சிறந்த - முடிவற்ற நிரந்தரத்தை நோக்கிச் செல்" என ஏந்தல் ஹுஸைன் அவர்கள் சொன்னபோது

அஸ்ஸலாமு அலைக்க யா அபாஅபதில்லாஹ் ஸல்லல்லாஹு அலைக்க வஅலா அஹ்லி பைதிக அ்ர.்.பழ்ழாஹு பைனனா வபைனக .்.பில்ஜன்னா - எமக்கும் உங்களுக்கும் இடையே அல்லாஹ் சொர்க்கத்தை அறிமுகமாக்கி வைப்பானாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வீரக் காவியம் பாடியதும் இமாம் ஹுஸைன் ஆமீன் ஆமீன் என்றார்கள். பின்னர் களமிறங்கி கடுமையாகப் போராடி பல இன்னல்களுக்கு முகங் கொடுத்து அவற்றை எல்லாம் தம் இலட்சியப் பாதையில் சத்திய சோதனையாகக் கருதி பொறுமையாக வெற்றி கொண்டு வீரமரணமெய்தி னார்கள் அஸ்அதுஸ்ஸபாமி அவர்கள்.

இதனைத் தொடர்ந்து ஸஅதிப்னு ஹழ்ழலா அத்தமீமி களமிறங்கி வீரச்சிங்கமாய் பொறுமையின் எல்லைக்கே சென்று தாக்குதலுக்குள்ளாகி கடுமையான காயங்களுடன் உயிருக்காய் போராடிக் கொண்டிருந்தபோது 'ஹுஸைன் கொள்ளப்பட்டு விட்டார்' என எதிரிகள் ஆர்ப்பரித்தனர். குற்று யிராகவே ஹழ்ழலாவை எடுத்துச் செல்ல எத்தனித்தனர். அவரிடமிருந்த ஆயுதத்தைக் களைந்தெடுத்து அவர் உயிர் நீக்கும்வரை வம்பர் கூட்டம் தாக்கினர்.

அவரைத் தொடர்ந்து அம்ர் இப்னு கர்ழதுல் அன்ஸாரி என்பவர் இமாமிடம் களமிறங்க அனுமதி பெற்று போர்ச் சிங்கமாக வீறுகொண்டு பாய்ந்தார். இமாம் ஹுஸைனை நோக்கிவரும் ஈட்டிகளை தன் கையினால் தடுத்தும் வாள் வீச்சுக்களை தன் உதிரத்தினாலும் வீசியும் தலைவரைத் தாக்கவரும் ரணங்களைத் தாம் தடுத்து காயங்களுக் குள்ளாகியபோது இமாம் ஹுஸைனை நோக்கி "யப்ன றசூலில்லாஹ்! (அளித்த வாக்குறுதியை) நிறைவேற்றி னேனா?" என வினவியபோது "ஆம், எனக்கு முன் நீர் சொர்க்கம் செல்வீர். அப்போது எனது ஸலாத்தை றசூலுல் லாஹ்வுக்கு எத்தி வைத்து நான் பின்தொடர்ந்து வரவுள்ள தாக தெரியப்படுத்தும்" என்று கூறினார்கள் கண்மணி ஹுஸைன் அவர்கள்.

பின்னர் நபிகளாருடன் பத்ர், ஹுனைன் போன்ற யுத்தங்களைக் கண்ட வயோதிபர் ஜாபிர் இப்னு உர்வதுல் கஃப்ஃபாரி போர்க்களம் செல்ல தலைப்பாகையை நடுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இடுப்பில்) கட்டி கண்புருவத்தை அது படும் அளவு கட்டியதைக் கண்ணுற்று சோகமே உருவாகியிருந்த செம்மல் ஹுஸைன் "உங்கள் முயற்சிக்காக ஷெய்க் அவர்களே அல்லாஹ்வுக்கு நான் நன்றி கூறுகின்றேன்" என்றனர். அவ்வயோதிபர் களம்புகுந்து பலரைக் கொன்றொழித்தபின் வீரமரணமெய்தினார்.

கப்பாரி வம்சத்தைச் சேர்ந்த அப்தல்லாஹ் மற்றும் அப்துர்ரஹ்மான் ஆகிய இருவரும் இமாம் முன் தோன்றி "அஸ்ஸலாமு அலைக்க யா அபாஅப்தில்லாஹ்! உங்கள் சமுகத்தில் வீரமிகு உயிப்பலியாக விரும்புகின்றோம்" எனக் கூறியபோது இமாம் ஹுஸைன் அவர்கள் "மர்ஹபன் பிகுமா" என வரவேற்று "என்னிடம் நெருங்கி வாருங்கள்" எனக் கூற, இமாமை நெருங்கிய அவ்விருவரும் அழ ஆரம்பித்தனர் என் சகோதரர்களின் மைந்தர்களே ஏன் அழுகின்றீர்கள்? "இறைவன் மீது ஆணையாக, சற்று நேரத்தின் பின் நீங்கள் என் கண் குளிர்ச்சியாகிவிடுவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்" என்றார்கள் அபாஅப்தில்லாஹில் ஹுஸைன் அவர்கள்.

பதிலுக்கு அவ்விருவரும் "அல்லாஹ்மீது ஆணையாக அல்லாஹ் எம்மை தங்களுக்கு அர்ப்பனமாக்கட்டும். நாம் எமக்காக அழவில்லை. உங்களை நினைத்தே அழுகின் றோம். உங்களை (எதிரிகள்) சுற்றி வளைத்துள்ளனர். எம்மால் பயன்மிக்க எதுவுமே உங்களுக்குச் செய்ய முடியவில்லையே" என்றனர். பதிலுக்கு இமாம், "என் சகோதரர்களின் மைந்தர்களே, எம்மைப் பற்றிய உங்கள் கவலை, மனவேதனை என்பவற்றிற்காக இறையச்ச மிக்கவர்களுக்கான மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" எனக் கூறி இமாம் ஆசீர்வதித்தார்கள். பின்னர் இருவரும் போர்க்களம் செல்லும் நோக்கில் இமாமைப் பார்த்து "அஸ்ஸலாமு அலைக்க யப்ன றசூலில்லாஹ்" எனக் கூறிய போது இமாம் ஹுஸைன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வஅலைக்குமுஸ்ஸலாம்" என வழியனுப்ப அவர்கள் களம்புகுந்து போராடி ஈற்றில் ஷஹீதாகிப் போனார்கள்.

## மாநபியின் சாயலில் மாவீரர்

தொடர்ந்து பனூ ஹாஷிம்களது கட்டம் வந்தபோது அவர்களில் இமாமின் புதல்வர் ஹஸ்ரத் அலீ அக்பர் அவர்களே முதலில் படுகொலை செய்யப்படுகின்றார். இவரைப் பற்றி கவிஞர் ஒருவர்:

*அவருக்கு நிகராக எவரையும் எக் கண்ணும் காணவில்லை*

*சத்தியப் பாதையில் இலட்சியப் பயணம் செய்பவரின் புதல்வர் மரணித்தவர் (போல்) நடை பயில*

*கண்ணியமும் சிறப்புமிக்கவரின் புதல்வியின் புதல்வரே அவர்*

*அவரது மார்க்க வழியில் உலக விவகாரம் எத்தாக்கமும் புரியவில்லை*

*உண்மைக்காக எவ்விதப் பொய்யையும் விற்கவில்லை.*

பெருமானார் (ஸல்) அவர்களது பண்பாகவும் தோற்றமாகவும் காணபப்பட்ட ஹஸ்ரத் அலீ அக்பர் களமிறங்கிப் போராட தந்தை ஹுஸைனிடம் உத்தரவு கேட்டபோது இமாம் ஹுஸைன் அவரை சோகம் ததும்பப் பார்த்தார்கள். இருகண்களும் கண்ணீர் மல்க நரைத்த தாடியுடன் விண்ணகத்தை நோக்கி "யா அல்லாஹ்! உனது றசூலுக்கு இணையாக படைப்பிலும் குணத்திலும் ஏற்புடையவரான இம்மனிதருக்கெதிராக நிற்கும் இக் கூட்டத்தைப் பற்றி நீயே சாட்சியாக இருந்துகொள். உனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபியைக் காணவேண்டும் என ஆசை ஏற்பட்டால் இம்மனிதரின் முகத்தைப் பார்த்து ஆறுதல் அடைவோம். இறைவா! இவர்களுக்கு உன் பூமியின் அருளைத் தடுத்துக் கொள். அவர்களைப் பிரித்துவை. அவர்களைத் துவம்சமாக்குவாயாக. அவர்களது பாதைகளை மாற்றிவிடு. அவர்களுக்கு மன்னிப்பை வழங்கிவிடாதே. அவர்களில் எவரையும் ஆட்சியாளர்களாய் நீ பொருந்திக் கொள்ளாதே. அவர்கள் எமக்கு உதவி புரிவோம் எனக் கூறி எம்மை அழைத்தார்கள். (ஆனால்) எம்மைக் கொன்றொழிக்க விரைந்துள்ளனர்" எனப் பிரார்த்தித்தார்கள்.

பின்னர் "ஸஅதின் மகனே, நீர் எனது இனபந்தை அழித்து றசூலுல்லாஹ்வின் நெருக்கமான என் உறவினர்கள் விடயத்தில் நடந்துகொண்டது போன்று, அல்லாஹ்வும் உமக்கு அருள் புரியாதிருக்கட்டும். எனக்குப் பின் உம்மைக் கொலை செய்பவர் உன் இருப்பு மீது அரசாதிக்கம் செய்யட்டும்" என சப்தமிட்டவாறு

> "நிச்சயமாக அல்லாஹ் ஆதமையும் இப்ராஹீமுடைய குடும்பத்தினரையும் இம்ரானுடைய குடும்பத்தினரையும் அகிலத்தாரை விட மேலாகத் தேர்ந்தெடுத்தான்". (03:33)

என்னும் இறைவசனத்தை ஓதினார்கள்.

பின்னர் அலீ அக்பர் அவர்கள்,

*நான் அலீ -*
*நான் அலீ இப்னு ஹுஸைன் இப்னு அலீ.*

*நாங்களும் இறை இல்லமும் - மா*
*நபியாரைக் கொண்டு முதன்மையானோர்*
*எத்தனின் ஈட்டியால்*
*உங்களுடன் தொடர் சமர் புரிவேன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தன் தந்தையைக் காத்திட
எந்தன் வாள் இங்கு போராடும்
இந்த வீச்சு ஹாஷிமி - அலவி
வம்சத்தின் மரண அடி.

இறைவனின் மீதாணை !
முறைகேடானவனின் மகனே !
எம்மிடம் நீவிர் எவரும்
உயிருடன் மிஞ்ச மாட்டீர் !

எனும் கவிதையைப் பாடி, எதிரிகளின் கூட்டத்தில் புகுந்து அவர்களைத் தாக்கினார்கள். அவர்களின் வாள்வீச்சின் முன் தங்களது படையினர் ஈசல்களென மடிந்து விழுவதைக் கண்டு எதிரிகள் கூச்சலிட்டனர். நூற்றுக்கும் அதிகமானவர்களை அவர்கள் கொன்றொழித்ததாக வரலாற்றில் காணமுடிகின்றது. படுகாயங்களோடு தந்தையிடம் திரும்பி வந்து "தந்தையே, தாகம் என்னைக் கொன்று விடுகின்றது. ஆயுதத்தின் சுமை என்னைச் சக்தி இழக்கச் செய்துள்ளது. எதிரிகள்மீது சக்தி பெற்றெழ ஒரு மிடர் தண்ணீருக்கு ஏதும் வழியுண்டா?" எனக் கேட்கின்றார்கள்.

அன்புத் தந்தையிடம் தாகம் தீர்க்க முறைப்பாடு
செய்கின்றார்.

தாகம் வாட்டி வதைத்து தாக ஓசையே ஒலிக்கின்றது

இருளில் அழிந்தது போல் யாவரும் பெருமூச்சாகி
பனிக் கட்டி உறைந்தது போல் அவரது நா வரண்டு
போனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதறி அழுத கண்மணி ஹுஸைன் "என் புதல்வரே! உதவ முடியாதுள்ளதே. முஹம்மதே முஸ்தபா. அலீயே முர்தழா ஆகியோருடன் என்னையும் அழைக்கின்றாய். எவரும் உமக்கு பதிலளிப்பதாயில்லையே! அவர்களிடம் உதவி வேண்டி நிற்கின்றாய். அவர்களால் உமக்கு உதவ முடியவில்லையே (ஆஹ்)!

"சற்று (பொறுமையாக)ப் போராடுங்கள். சற்று நேரத்தில் உமது பாட்டனார் முஹம்மது (ஸல்)அவர்களைச் சந்திப்பாய். அப்போது தாகமே வராத அன்னாரது பாத்திரத்தில் நிறப்பமாய் தாகம் தீர்க்கப்படுவீர்" எனக் கவலை தோய்ந்த குரலில் இமாம் ஆறுதல் கூறி, "என் அருந்தவப் புதல்வரே, உமது நாவை நீட்டும்" எனக் கூறி அதனைச் சூப்பி விட்டு தங்களது மோதிரத்தைக் கொடுத்து, "இதனை உன் வாயில் அமிழ்த்திக் கொண்டு உன் எதிரிகளை நோக்கிச் செல். உமது பாட்டனாரிடம் நீர் அருந்தும்வரை தாமதிக்க மாட்டாய் என எதிர்பார்க்கின்றேன். இறைவன் உமக்கு அருள்புரிவான். மகனே சென்று வா" எனக் கூறி அனுப்பினார்கள் அண்ணல் ஹுஸைன் அவர்கள்.

அலீ அக்பர் அவர்கள் மீண்டும் கவிபாட ஆரம்பித்து,

*இந்தப் போராட்டம்*
*உண்மைகள் பலவற்றை வெளியாக்கியது.*
*அதில் சிலவற்றை*
*நிஜமாகவே இங்கு உருவாக்கியது.*

*அர்ஷின் மீதான*
*அல்லாஹ் மீதாணை !*
*உங்கள் கயவர் கூட்டத்தை*
*கலைந்தோட விரட்டும்வரை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பொறி பறக்கப் போராடுவேன்*
*பிரிந்து செல்ல மாட்டேன்*

என வீரக் காவியம் முழங்கி மீண்டும் பலரைப் பந்தாடினார்கள். கடுந் தாக்குதலின் பின் முர்ரத் இப்னு முன்கித் அப்தி என்பவனின் தாக்குத்லுக்குள்ளாகி வாள்வீச்சுக்களினால் வெட்டப்பட்டு குதிரையிலிருந்து சாய அக்குதிரை எதிரிகள் பக்கம் நோக்கி விரைந்தது. அப்போது அலீ அக்பரை கண்டந்துண்டமாய் விரோதிகள் துண்டாடினர். அன்னாரின் ஆன்மா பிரியும் வேளையில் "தந்தையே! இதோ என் பாட்டனார் பெருமானார் (ஸல்) எனக்கு தாகமே வராதிருக்க நிரப்பமாக அவர்களது பாத்திரத்தினால் தண்ணீர் அருந்தச் செய்வார்கள்" எனக் கூறியபோது அவர்களோ "விரைந்து செல், விரைந்து செல். உமக்காக ஏற்படுத்தப்பட்ட நீரை அருந்துவீர்" என நன்மாராயம் கூறினார்கள்.

எவருமே இதுவரை கேட்டிராத சப்தமாக இமாம் ஹுஸைன் அழுது, "உம்மைக் கொலை செய்த கூட்டத்தை அல்லாஹ் கொன்றொழிப்பானாக! பெருமானாரின் சங்கைக்கு இழுக்கேற்படுத்த முயற்சி செய்த அவர்கள் மீது றஹ்மான் தன் தண்டனையை நிறைவேற்றுவானாக.

"ஆனால் என் புதல்வரே! நீர் உலகின் கவலைகளிலிருந்து ஓய்வு பெற்று றவ்ஹ், றைஹான், ஜன்னத், றிழ்வான் (எனும் ஆத்மீகப் பயணம், அழகு, சொர்க்கம், இறை திருப்தி) என்பவற்றுடன் பயணித்து விட்டாய். உன் தந்தையோ உலகின் கவலை துன்பத்தில் சிக்குண்டுள்ளார். மிக விரைவில் உம்மைச் சந்திக்க வருவேன். உமக்குப் பின் உலகம் வெறுமை போலாகிவிட்டது மகனே" என்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அருந்தவப் புதல்வனே!
நீ பயணித்துவிட்டாய்! - ஆதலில்
உன்னை நான் பிரயாணி எனக் கூறினால்
மீண்டும் நீ இங்கு வருவாயா?

என் பார்வையில் என்றுமே
நீவிர் பெருமையானவராகவே இருந்தீர் !
உன்னைப் பார்ப்பவர் எவருமே
உனக்காக அழுது புலம்புவர் !
உனக்குப் பின்னரும் எவரேனும்
இங்கே (வாழ) விரும்பினால்
அவர் மரணிக்கட்டும் !

உம்மை நான் இழந்துவிடுவேன்
என்றே நான் அஞ்சிக் கொண்டிருந்தேன்.
உம்மைப் பற்றிப் பேசினால்
அதில் அழகே நிறைந்திருக்கும்.
உம்மை வர்ணிப்பது ஓர் அழியாத கோலம்.

நான் மௌனித்திருந்தால் அது
உந்தன் நினைவாகவே இருக்கும்.
அதிகாலைத் தாரகையின் ஆயுள் போன்றே
இளம் பேரொளியே! உந்தன் ஆயுளும்
சிறிதாகவே இருந்தது கேள் !

விடயமறிந்த இமாம் ஹுஸைனின் சகோதரி ஹஸ்ரத் செய்னப் "அருந்தவப் புதல்வரே! உள்ளத்தின் உதிரமே!" என ஒப்பாரியுடன் கூடாரத்திலிருந்து விரைந்து வந்து பூமியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ந்தார். அவரது கரங்களைப் பிடித்து கூடாரத்திற்கு அழைத்துச் சென்றார்கள் இமாம் ஹுஸைன் அவர்கள்.

"பனீஹாஷிம் இளைஞர்களே! உங்கள் சகோதரனை கூடாரத்திற்குக் கூட்டிச் செல்லுங்கள்" என அழைப்பு விடுத்தார்கள் இமாம் அவர்கள்.

## உடன்பிறப்புகளின் உன்னதப் போராட்டம்

இமாம் ஹஸன் அவர்களுக்கு காஸிம் எனும் நாமமுடைய சுமார் பதிமூன்று வயது மதிக்கத்தக்க ஓர் இளமகன் இருந்தார். இவர் சிறிய தந்தை இமாம் ஹுஸைனிடம், நிராகரித்தவர்களைத் தீர்த்துக்கட்ட தன்னை அனுமதிக்குமாறு வேண்டி நின்றார். இவரது வேண்டுகோளுக்குப் பதிலளித்த இமாம் ஹுஸைன் இவ்வாறு கூறினார்கள்: "என் சகோதரரின் அருந்தவப் புதல்வரே! நீர் என் சகோதரரின் நினைவுச்சுவடு. நீர் நீடித்து வாழ உம்மை நாம் அரவணைத்துக் காக்கவேண்டும்" எனக் கூறியபோது காஸிம் அவர்களோ இமாமின் கைகால்களில் விழுந்து தான் போர்க்களம் செல்ல அனுமதிக்குமாறு வேண்டி விடாப்பிடியாய் நிற்கின்றார். "என் அருமை மகனே! மரணத்தை நோக்கி நீ பயணிக்கப் போகின்றாயா?" எனக் கேட்க, "என் சிறிய தந்தையே! நீங்கள் எதிரிகள் மத்தியில் எவரது உதவியுமின்றி தன்னந்தனியாக விடப்படப் போகின்றீர்களே!" என்றார் அந்தச் சிறுவர்.

அவரது குதிரையில் இமாம் ஹுஸைன் கண்ணீர் மல்க அவரை ஏற்றிவிடுகின்றார்கள். காஸிம் இப்னு ஹஸன் பின்வரும் சோகக் கவிதையைக் கூறியவாறு பயணிக்கின்றார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை யாரென
உங்களுக்குத் தெரியா விடின்
நான் ஹஸனின் புதல்வன் காஸிம்.
அபயம் அளிக்கும்
அண்ணல் முஸ்தபாவின் பேரன்.

உங்களால் தண்ணீர்
அருந்த(வும்) தர மறுக்கப்பட்ட
இலட்சியம் நிறை வேங்கை.
உங்களால் இதோ
கைதியாக சிறைபிடிக்கப்பட்டுள்ளார்
எந்தன் சிறிய தந்தை ஹுஸைன்.

சந்திரப் பிரகாசமிக்க ஹஸ்ரத் காஸிம் கடும் போராட்டம் நடாத்திக் கொண்டிருந்தபோது அன்னாரின் பாதரட்சை சற்று களன்று விடுகின்றது. அதனைச் சரிசெய்ய குனிந்தபோது அம்ர் இப்னு ஸஅதில் அஸ்தி என்பவன் காஸிமின் தலையில் தாக்கிவிட்டான். முகம்குப்புற விழுந்த இச்சிறுவர், "சிறிய தந்தையே, என்னிடம் வாருங்கள்" எனச் சப்தமிட்டபோது இமாம் அவர்களோ படையணிகளை விலக்கிக் கொண்டு சினங் கொண்ட சிங்கமாய் விரைந்து சென்று காஸிமைக் கொன்றவனை தாறுமாறாக வெட்டியபோது தன்னைத் தப்பித்துக் கொள்ள ஒப்பாரி வைத்து ஓலமிட்டான் அவன். அவனது கரம் துண்டிக்கப்பட்டது. இவனது ஓலம் கேட்டு எதிரிப்படை இவனைக் காப்பற்ற வெகுண்டெழுந்து அடர்ந்தேறியபோது இவன் குதிரைகளின் கால்களுக்குள் நசுக்குண்டு மாண்டு போனான்.

படை சூழ்ந்ததால் கிளம்பிய புழுதியினால் அப்பிரதேசம் மூடப்பட்டிருந்தது. புழுதிப்படலம் தணிந்ததும் தன்னிடம் அடைக்கலமாகவும் பாதுகாப்பாகவும் இமாம் ஹஸனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுச்சுவடாகவும் இருந்த காஸிமின் தலைப்பக்கமாக இமாம் ஹுஸைன் நின்றவாறு:

"அல்லாஹ்மீது ஆணையாக உன்மீது என் சோக அஞ்சலி! உன் சிறிய தந்தையை அழைக்கின்றாய். அவரால் உனக்குப் பதிலளிக்க முடியவில்லை, அல்லது பதிலளிக்கின்றார்: அது உமக்குப் பயனளிப்பதாயில்லை. எமக்கோ எதுவும் செய்யமுடியவில்லை. உம்மைக் கொலை செய்த கூட்டம் மரணிக்கட்டும். உமது பாட்டனதும் உமது தந்தையினதும் கோபத்தை மறுமையில் கண்டு கொள்ளட்டும். அல்லாஹ்வின் மீது ஆணையாக இந்நாட்களில் தனிமை அதிகரித்து, உதவுவோர் அருகிவிட்டனர்" என இமாம் சோக வசனங்களை உதிர்த்தார்கள்.

காஸிமின் பாதங்கள் பூமியில் பட்டவாறு அன்னாரைத் தூக்கிவந்து உயிர்ப்பலியான அஹ்லுல்பைத்தினரிடையே கிடத்தினார்கள்.

இவரைத் தொடர்ந்து காஸிமின் மற்றொரு சகோதரரான அஹ்மத் இப்னு ஹஸன் களமிறங்கிப் போராடி கடும் சமர் செய்ததனால் அன்னாரின் கண்கலங்கிய காட்சி கடுந்தாகத்தை எடுத்துக்காட்டியது. அப்போது இமாம் ஹுஸைனைப் பார்த்து "என் சிறிய தந்தையே! இரைப்பையின் சூட்டைத் தணித்துக் கொள்ள ஒரு மிடர் தண்ணீருக்கு வழியேதுமுண்டா?" எனக் கேட்டார்கள் அஹ்மதிப்னுல் ஹஸன் அவர்கள்.

"சகோதரனின் புதல்வரே! சற்றுப் பொறுமை காப்பீராக! உம் பாட்டனாரிடம் சற்று நேரத்தின் பின் தாகந்தீர தண்ணீர் அருந்துவீர்கள்" என ஆற்றுப்படுத்தினார்கள் அபா அபதில்லாஹில் ஹுஸைன் அவர்கள். மீண்டும் புத்துயிர் பெற்று களமிறங்கிப் போராடி குதிரை வீரர்கள் பலரைக் கொன்றொழித்துவிட்டு தானும் வீர ஷஹாதத்தைத் தழுவிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார்கள் அஹ்மதிப்னுல் ஹஸன் அவர்கள்.

தொடர்ந்து, இவர்களது மற்றொரு சகோதரன் அபூபக்கர் இப்னு ஹஸன் பின்வரும் காவியத்தைப் பாடியவாறு களமிறங்குகின்றார்கள்:

*உங்களுக்கு என்னைத் தெரியுமா?*
*எதிரிகள் மீது சீறிப் பாய்ந்து*
*சிதறடித்துத் தாக்கும்*
*புயல் காற்றான -*
*புதர் புறப்பட்ட சிங்கம் -*
*இதோ புறப்பட்டுவிட்டேன்*
*வீரனாய் விரைந்து எந்தன்*
*வாளினால் உங்கள் தலைகளை*
*எடை போடுவேன்*

எனக் கூறி நேருக்கு நேராக களமிறங்கி கடும் சமர் செய்து கடைசியாக இவர்களும் கொலையுண்டு வீரமரணம் எய்தினார்கள்.

இவர்களைத் தொடர்ந்து இமாம் அலீயின் புதல்வர்கள் களமிறங்குகின்றனர்.

முதலில் அபூபக்கர் இப்னு அலீ போர்க்களமிறங்கிப் போராடி பின் ஷஹீதாகின்றார்கள்.

அதன் பின் அவுன் இப்னு அலீ யுத்தக் களமிறங்க முற்பட்டபோது இவர்களை நோக்கிய இமாம் ஹுஸைன்: "திரண்ட படையும் அதிக படையையுங் கொண்ட படையோடு எவ்வாறு போராடப் போகிறீர்?" எனக் கேட்க,

"உங்களுக்காக வீரமரணமெய்த முன்வருபவர் அதிகமானவர் குறைவானவர் என்பதையெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்படுத்த மாட்டார்கள் எனப் பதிலளித்து, களமிறங்கிப் பலரைக் கொன்றொழித்துடன் எதிரிகளை இடம் வலமாகச் சிதறடித்து படையணியைத் திண்டாடச் செய்து விட்டார். இதனிடையே இமாமிடம் மீண்டும் வந்தபோது இமாம் ஹுஸைன் அவர்கள் அவரை முத்தமிட்டு "பாரிய காயங்களுடன் காணப்படும் நீர் செய்தது நன்மையாகவே உள்ளது. சற்று பொறுமையோடு அனைத்தையும் தாங்கிக் கொள்ளும். உமக்கு சுபசோபனம் உண்டாகட்டும்" என வாழ்த்தியபோது போராளியான அவுன்,

"தலைவரே! உங்களிடமிருந்து நற்பாக்கியம் பெற ஆவலாயுள்ளேன். உங்கள் திருமுகத்தை மீண்டும் சந்தித்து இன்பமுற ஆவலாயிருக்கின்றது" எனக் கூறி மீண்டும் திரும்பிச் சென்று போராடியபோது ஒருவனது அம்புக்கு இலக்காகி உயிர் நீத்தார் அவுன் இப்னு அலீ அவர்கள்.

தற்போது (ஆண்மக்களின் தாய்) உம்முல் பனீனின் புதல்வர்களின் கட்டம் வந்தபோது ஹஸ்ரத் அப்பாஸ் இப்னு அலீ அவர்கள் "என் தாயின் புதல்வர்களே! இறைவனுக்காக வும் அவனது தூதருக்காகவும் கலப்பற்ற மனத்தூய்மை யுடன் நீங்கள் உங்கள் தலைவருடன் வீரமரணமாகும்வரை அவருக்கு உதவி செய்யுங்கள்" எனக் கூறினார்.

சுமார் பதினைந்து வயது மதிக்கத்தக்க அபதுல்லாஹ் இப்னு அலீ மாவீரராய்ப் போராடி குதிரைகளைத் திணறடித்த போது ஹான் இப்னு ஸமீத் அல்-ஹழ்ரமீயினால் கொலைசெய்யப்பட்டார்கள்.

இவரைப் போன்றே ஜ.்பர் இப்னு அலீ களமிறங்கிப் போராடி அன்னாரும் ஷஹீதாகி விடுகிறார்கள்.

தற்போது அப்பாஸ் இப்னு அலீயின் கட்டம் வந்தபோது இமாமுடன் போராட அவர் முன்னால் எழுந்து நிற்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஜானுபாகுவானவர், கம்பீரமானவர். சகல ஆளுமைப் பண்பும் மிக்கவரே ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள். நீர் புகட்டியவர், பனீஹாஷிமின் முழுமதி எனும் சிறப்புப் பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்ட இவர்கள், உயரமான தோற்றமுடையவர். வனப்புமிக்க குதிரைமீது ஏறியபோதும் அவர்களின் பாதங்கள் பூமியைத் தொடுமளவு வியத்தகு அழகானவர்.

தன் சகோதரர் அபாஅப்தில்லாஹில் ஹுஸைனிடம் வந்து, "என் சகோதரரே எனக்கு(ம்) அனுமதி உண்டா?" எனக் கேட்டபோது இமாம் ஹுஸைன் அழுதார்கள். தன் தாடி நனையும்வரை அழுத இமாம் ஹுஸைன், "என் சோதரனே! நீர் எமது படையின் நிபுணத்துவம் பெற்றவர் (இராணுவத் தளபதி). நீர் போராடச் சென்றால் அனைவரும் சின்னாபின்னமாகி எமது கட்டமைப்பே சிதறுண்டு விடும் எனக் கூறியபோது, அண்ணல் அப்பாஸ் அவர்கள் "உங்கள் சகோதரனின் ஆத்மா தங்களுக்கு அர்ப்பனமாகட்டும். உலக வாழ்வு என் நெஞ்சை இறுகச் செய்து விட்டது. இந்த நயவஞ்சகர்களிடமுள்ள குரோதத்தைப் பிடி(த்து அழி)க்கப் போகின்றேன்" எனக் கூறினார்கள்.

## வரண்ட நாவுகளுக்குத் தண்ணீர் மறுத்த ஈரமற்ற நெஞ்சங்கள்

அப்பாஸை நோக்கிய இமாம் "இச்சிறார்களுக்காக அவர்களிடம் கொஞ்சம் தண்ணீர் கேளுங்கள்" என்றார்கள். போர்க்களத்தின் மையத்திற்கே சென்ற அப்பாஸ், "உமர் இப்னு ஸஅதே, இதோ பெருமானாரின் புதல்வியின் புதல்வர் ஹுஸைன் உங்களிடம் இவ்வாறு கூறுகின்றார்: "நிச்சயமாக நீங்கள் அவரின் நண்பர்களையும் அவர்களது சகோதார்ர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் அவர்களது சிறிய தந்தையின் பிள்ளைகளையும் கொன்றொழித்து விட்டீர்கள். அவர்களோ தன்னந்தனியே அவரது பிள்ளைகள் உறவினர்கள் கடுந்தாகமாக உள்ளார்கள். இதனால் அவர்களது நாவுகள் தாகத்தால் வரண்டு காய்ந்துவிட்டன. அவர்கள் தண்ணீர் அருந்த சற்று நீர் வழங்குங்கள். ஏனெனில் அன்னாரின் பிள்ளைகளும் குழந்தைகளும் அழிவின் எல்லைக்கே சென்று விட்டார்கள்" எனக் கூறினார்கள் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள்.

ஹஸ்ரத் அபுல் பழ்லுல்அப்பாஸின் உருக்கமான இவ்வேண்டுகோளைச் செவிமடுத்த பகைவர் கூட்டத்தில் சிலர் அமைதி காத்தனர். வேறு சிலரோ அமர்ந்தவாறு அழ ஆரம்பித்தனர். இதனிடையே ஈவிரக்கமற்ற கொடியவர்களான ஸிம்ரும் ஸபஸ் இப்னு ரபீயி என்போனும் பின்வருமாறு இகழ்ந்தனர்:

'மண்ணின் தந்தை(அலீ)யின் மகனே! உன் சகோதரனுக்குச் சொல்: பூமி யாவும் தண்ணீராக இருந்து அது எமது கட்டுப்பாட்டின் கீழிருந்தால் எஸீதிற்கு சத்தியப் பிரமானம் செய்யும் வரை ஒரு சொட்டுத் தண்ணீர் கூட உமக்குத் தரமாட்டோம்'.

புன்முறுவல் செய்தவாறு இமாம் ஹுஸைனிடம் திரும்பிய அபுல் பழ்லுல் அப்பாஸ் அக் கூட்டத்தின் பதிலை எடுத்துக் கூறியபோது இமாம் ஹுஸைன் கண்ணீர் விட்டழுதார்கள். 'தாகம், தாகம்' என அழும் ஓசை அப்பாஸின் காதில் விழுந்தபோது தன் ஈட்டியையும் தண்ணீர்ப் பாத்திரத்தையும் எடுத்தவாறு குதிரை மீதேறிச் சென்றார்கள். இப்னு ஸஅத், ஹுஸைனின் சகாக்கள் நதியிலிருந்து தண்ணீர் அருந்துவதைத் தடுக்கும் வகையில் சுமார் நான்காயிரம் படை வீரர்களை நிறுத்தியிருந்தார்.

அபுல்பழ்லுல்அப்பாஸ் அவர்கள் மீது தாக்குதல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுத்து அவர்களைக் களைத்து வெளியாக்கிவிட்டு பின்வரும் வீரக் காவியம் பாடினார்கள்:

*நான் மரணத்திற்கு அஞ்சுபவனல்ல - மரணமோ உயர்வானது*

*சந்திக்க உள்ள (மறுமை)நாளின் இன்னல்களுக்கு நான் அஞ்சுபவனல்ல.*

*நிச்சயமாக அப்பாஸாகிய நான் நீர் புகட்டும் போராட்டத்திற்காய் புறப்பட்டுள்ளேன்*

*ஒடுக்கி விரட்டப்பட்ட உறவுகளுக்கு தண்ணீர் புகட்டும்வரை*

நதியின் ஓரத்திற்கே சென்று தண்ணீர் அருந்த எத்தனித்தபோது,

ஹுஸைனும் அவர்களது குடும்பத்தினரும் தண்ணீரின்றி தாகித்துக் கிடக்கின்றனரே என்னும் நினைவு வந்ததும் அள்ளிய நீரை வீசிவிட்டு மற்றுமோர் கவிபாடுகின்றார்:

*உயிரே ஹுஸைனுக்குப் பின் நீர் வாழ்ந்தால் (என்ன மடிந்தால்) என்ன*

*அவருக்குப் பின் நீ வாழ்ந்து விடாதே*

*இதோ ஹுஸைன் மரணத்தை அருந்திக் கொண்டிருக்கின்றார்*

*(ஆத்மாவே நீ) குளிரான தண்ணீரை அருந்துகின்றாயா?*

*இதனை எனது மார்க்கம் ஒருபோதும் செய்யாது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இது உறுதிமிக்க உண்மையாளனின் செயலல்ல.*

தோல் துருத்தியில் தண்ணீரை நிறைத்துக் கொண்டு புயத்தில் சுமந்தவாறு கூடாரம் நோக்கி புறப்பட்டபோது பாதையைத் தடுத்து அப்பாதையை சுற்றிச் சூழ்ந்து கொண்டு ஈட்டிகளினால் அவரைத் தாக்கினர். அவர்களது தற்காப்புக் கவசம் அதிகமான அம்புகளின் தாக்குதல்களினால் சல்லடை போன்று ஆகிவிட்டது. ஈத்தமரத்தின் பின்னால் ஒளித்திருந்த செய்திப்னு வர்காவும் அவனுக்கு உதவியாக ஹகீம் இப்னு துபைலும் வரப்புறமாகத் தாக்கி அன்னாரின் வலக் கரத்தைத் துண்டாடினர். இடக்கரத்தால் வாளை ஏந்தியவாறு, 'இறைவன் மீது ஆணையாக, என் வலக்கரத்தைத் துண்டித்தாலும் நிச்சயமாக நான் என் சன்மார்க்கத்தையும் தூய நன்நம்பிக்கை மிக்க நபியின் மகனான இமாமை உறுதியுடன் பாதுகாத்தே தீருவேன்' என வீர முழக்கம் செய்தவாறு தன்னால் முடியுமானவரை கடுமையாகப் போராடினார். இந்நிலையில் அவர்களின் இடக்கரத்தைத் துண்டித்தனர் அப்போது:

*ஆத்மாவே!*
*நிராகரிப்போரையிட்டு அஞ்சாதே !*
*அடக்கி ஆள்பவனின்*
*அருளைக் கொண்டும்*
*நன்மாராயம் பெறுவாயாக !*

*அவர்களது அழிச்சாட்டியம்*
*எந்தன்*
*இடக்கரத்தை கொய்துவிட்டது*
*நரகத்துக் கடுஞ் சூட்டின் இரட்சகனே!*
*அவர்களுக்கு அதனையே கொடுப்பாயாக !*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பாடிப் பிரர்த்தித்தார்கள்.

திடீரென ஒரு அம்பு வந்து தோல்துருத்தியைத் தாக்கி அதிலிருந்த தண்ணீர் வடிந்தோடி விட்டது. தாக்குதல் நடாத்த கையில்லை! கூடாரத்திற்குச் செல்ல தண்ணீரில்லை! ஏது செய்வதென ஹஸ்ரத் அப்பாஸ் திகைத்து நின்றார்கள். இரும்புக் கம்பியினால் ஒரு வம்பன் அவர்களைத் தாக்கியபோது அன்னார் குதிரையிலிருந்து சாய்ந்த நிலையில் "என் சகோதரனே! உங்கள் சகோதரனைப் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள்.." எனச் சப்தமிட்டார்கள்.

*கலையாத குலையாத*
*கட்டியான இரும்பு மார்புகொள்*
*ஹாஷிமி குலக் கொடி*
*குதிரையில் இருந்து வீழ்ந்து*
*குருதி வெள்ளத்தில் குப்புறக்*
*கிடக்கிறார் - அவருக்காய்*
*அழவேண்டுமே அதனால்*
*கர்பலாவில் சந்திர கிரகணம்*
*கர்பலா இருளானதுவே !*

*குருதியில் கிடக்கும் எந்தன்*
*சோதரனே !*

*எந்தன் முதுகெலும்பு இதோ*
*உடைந்து போனதே !*

*உந்தன் தளர்நடை*
*எந்தனுக்கு மரணச் சேதி*
*அல்லவா கூறுகின்றது.*

வேகமாய்ப் பறக்கும் பருந்தைப் போல் இமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹுஸைன் அப்பாஸை நோக்கி விரைந்து சென்றார்கள். ஹஸ்ரத் அப்பாஸின் கரங்கள் துண்டிக்கப்பட்டு நெற்றியில் பல கீறல்கள்! ஈட்டி ஒன்று முகத்தைத் தாக்கியதால் ஒரு கண்தோண்டப்பட்ட நிலையில் காணப்பட்டது. இதனைக் கண்டு மனமுடைந்து அன்னாரின் தலைப்பக்கமாக நின்ற இமாம் ஹுஸைனின் சோகம் சொல்லில் அடங்காதது! வார்த்தையில் வர்ணிக்க முடியாதது!

அபுல் பழ்லுல் அப்பாஸின் ஆன்மா நிரந்தரத் துயிலாகின்றது. இவ்வாறான கட்டத்தில்தான் இமாம் ஹுஸைன்:

சோதரனே !
தற்போது எந்தன் முதுகெலும்பே
முறிந்து போனது !
தந்திரோபாயம் அனைத்தும்
குன்றிப் போனது !
பகைமைதான் விஞ்சி விட்டது.

இன்று பளபளவெனப் பளிச்சிட்ட
வாள் வீச்சு விலகிக் கொண்டது.
இன்று எமது உறவுகள் கூட்டம்
விரிசலாகி விட்டது.
இன்று எமது பாரிய படையணி
உடைந்து போனது.
இன்று ஆயுதங்களின் தந்திரங்கள்
முழிந்து போனது.
இன்று தொழுகை அதன் இமாமை
மறைத்துக் கொண்டது.
இன்று உமக்காக துயில்கொண்ட கண்கள்
நிரந்தரமாய் உறங்கி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று விழிப்பற்று அவை
நிரந்தரத் துயிலாகி விட்டது.

✷ ✷ ✷

அப்பாஸே !

எதிரிகள் எம்மை
கபளீகரம் செய்கையிலே
ஸெய்னப் உம்மை
உதவிக்காய் அழைத்தால் அதனைச்
செவிமடுப்பீரா...?

அல்லது -
சிறிய தந்தையாரே
கைதியாகும் நாளில்
யாருண்டு எமக்குதவி புரியவென்ற
ஸக்கீனாவின் அழைப்பையாவது
கேட்பீரா...?

இதனைத் தொடர்ந்து இமாம் ஹுஸைன் தான் இருக்கும் கூடாரம் நோக்கி வந்தபோது சகீனா அம்மையார்:

"என் அன்புத் தந்தையே! எனது சிறிய தந்தை அப்பாஸ் பற்றிய தகவல்கள் ஏதும் உங்களுக்குத் தெரியுமா?" எனக் கேட்டபோது, உடனே இமாம் ஹுஸைன் அழுது விட்டார்கள் "அன்பு மகளே! உமது சிறிய தந்தை உயிர்ப்பலியாகி விட்டார்கள்" என்றார்கள் இமாம் ஹுஸைன் அவர்கள்.

முஹம்மத் இப்னு அப்தல்லாஹ் இப்னு ஜ.்.பர் என்பவர் ஹஸ்ரத் அலீயின் புதல்வி பீபி செய்னபின் மகன். இவர்களும் சத்தியத்திற்கும் அசத்தியத்திற்குமான போராட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேருக்கு நேர்நின்று போராடி உயிர் நீத்தார்கள். இவ்வாறே இவர்களது சகோதரர் அவுன் இப்னு அப்தல்லாஹ் இப்னு ஜ.்.பரும் பலரை வாளுக்கிரையாக்கி பின்னர் வீரமரணம் எய்தினார்கள்.

இவர்களது சகோதரரான உபைதுல்லாஹ் என்பவரும் வீரமரணமாகும்வரை போராடி கர்பலா ஷுஹதாக்களின் துயிலகத்தில் இடம்பெற்றுக் கொண்டார்கள்.

இமாம் ஹுஸைனிடமிருந்த ஓர் குலாம் (அடிமை) களமிறங்கி அங்கும்மிங்கும் நோட்டமிட்டவாறு பயணித்தபோது ஹானி இப்னு ஸபீதுல் ஹழ்ரமியின் வாளுக்கு இரையாகியதை அவரின் தாய் பார்க்கின்றாள். தாங்கொணா அதிர்ச்சியில் அவள் பேச்சுமூச்சற்று மயங்கிவிட்டாள்.

இந்நிலையில் இமாம் ஹுஸைன் கூறும் வார்த்தைகள் உண்மையில் உள்ளத்தை அப்படியே உருக்குலையச் செய்து விடுகின்றன: றசூலுல்லாஹ்வின் சங்கயைப் பேணும்வகையில் இதனைத் தடுத்து நிறுத்துவோர் யாருமில்லையா? எமது விடயத்திற்காக இறைவனைப் பயப்படும் ஏகத்துவவாதிகள் யாருமில்லையா? இலட்சியத் தோடு எமக்கு உதவுவோர் எவருமில்லையா? என சப்தமிட்டார்கள் சர்தார் ஹுஸைன் அவர்கள்.

## பால்குடி மாறாப் பாலகனும் பலி!

பெண்களின் அழுகுரல் ஓங்கி ஒலித்தது. கூடாரத்தின் வாசலுக்கே சென்ற இமாம் தன் சகோதரி ஹஸ்ரத் செய்னப் பிந்து பாதிமாவிடம் "என் பாலகர் (அலீஅஸ்கர்)ரைக் கொண்டு வாருங்கள். என் சகோதரியே! நான் பிரியுமுன் அவரைக் காண்பதற்கு என்னிடம் கொண்டு வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அவரிடமிருந்து பிரியா விடைபெறப் போகின்றேன்" என்றார்கள்.

குழந்தையைக் கொண்டு வந்தார் செய்னப். வற்றாத ஊற்றாக கண்ணீர் நிறைந்தது.

தாகம் கொழுந்து விட்டெரிந்து உள்ளம் கருகியது.

கண்கள் மாறி வயிறு ஒட்டி உதடுகள் வரண்டு போயின.

அவ(அலீஅஸ்க)ரைக் கண்டதும் உள்ளம் வெந்து வெதும்பி கண்ணீர் பொங்கிப் பெருகி ஆற்றாமையினால் தரைமீது வீழ்ந்து அழுதார்கள் இமாம் ஹுஸைன் அவர்கள்.

குழந்தையின் தாகத்தின் அகோரம் நெருப்புக் கங்கு போல் உள்ளம் சுட்டெரித்ததை இருகரங்களும் சாட்சி பகர்ந்தன. இப்பரிதாபத்தைக் கண்ணுற்ற இமாம் பகைவர் முன் சென்று: "கூட்டத்தார்களே! எனது நண்பர்கள் எனது பிள்ளைகளை எல்லாம் கொன்றொழித்து விட்டீர்கள். இச்சிறுகுழந்தை மாத்திரமே என்னிடம் எஞ்சி இருக்கின்றது. எனக்கு நீங்கள் கருணை காட்டாவிட்டாலும் இக்குழந்தைக்கு கருணை காட்டுங்கள். இவரது தாயின் மார்பு பாலின்றி சோம்பி விட்டது" என உருக்கமாக வேண்டினார்கள்.

கல்லும் கரையும் இந்த வார்த்தைகளுக்குப் பதிலாக -

கல்லினும் கொடிய மனம் கொண்ட அந்தக் கூட்டத்திலிருந்து அவரை நோக்கி ஒரு அம்பு வீசப்படுகின்றது. பாலகன் அலீ அஸ்கரின் கழுத்தை அது பதம்பார்த்தது. குழந்தையின் அறுபட்ட இடத்தில் கையை வைத்த இமாம் ஹுஸைனின் கரங்கள் வடிந்தோடிய இரத்தத்தை விண்ணகம் நோக்கி வீசியவாறு "என்மீது நடந்த இந்நிகழ்வை இறை சன்னிதானத்தில் எனக்கு இலகுவாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வை. யாஅல்லாஹ் (ஸாலிஹ் நபியின்) ஒட்டகக் குட்டியைவிட எனது இக்குழந்தை இழிவானதல்ல" என உள்ளம் உருக உடல் நடுங்க ஆறாத்துயருடன் பொறுமையின் இமயம் இமாம் ஹுஸைன் அவர்கள் இவ்விதமாய் பிரார்த்தனையில் ஈடுபட்டார்கள். கொலையுண்ட பாலகரை தன் வாளினால் மண்ணைத் தோண்டி பச்சிளம் பாலகர் அலீ அஸ்கரை இமாம் நல்லடக்கம் செய்தார்கள்.

அன்றைய மதியவேளை இமாம் ஹுஸைனின் மனைவிக்கு ஒரு சிசு பிறந்ததாகவும் அறிய முடிகின்றது. கூடாரத்தில் தனக்குரிய இடத்தில் அமர்ந்திருந்த இமாம் ஹுஸைன் அவர்களிடம் அச்சிசுவைக் கொடுத்ததும் அவர்கள் அச்சிசுவை தன் மடிமீது வைத்துக் கொண்டு வலக்காதில் அதானையும் இடக்காதில் இகாமத்தையும் ஓதி ஊதினார்கள். இந்நிலையில் ஒரு வம்பனின் தாக்குதலுக்குள்ளாகி அச்சிசுவும் ஹுஸைனின் மடியிலேயே குற்றுயிராகியது.

அந்த நிகழ்வு கவிஞரின் பார்வையில் இப்படி:

*மரண ஓலங்களின் மத்தியிலும் அங்கே ஒரு ஜனனம்*
*நடைபெற்றது.*

*ஒரு குழந்தை அவரின் சந்ததியாக உலகை எட்டிப்*
*பார்த்தது.*

*தன் குழந்தையை அன்பினால் முத்தமிட அவர்*
*முனைந்தார்.*

*முத்தமிடு முன்னே ஓர் அம்பு முந்திக்கொண்டு*
*குழந்தையின் கழுத்தை முத்தமிட்டது.*

*அவரை முந்திக் கொண்டு ஓர் ஈட்டி அந்த சிசுவின்*
*கழுத்தில் தக்பீர் முழங்கிவிட்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமாம் ஹுஸைனின் நண்பர்கள் உறவினர்கள் என அனைவரும் கொலை செய்யப்பட்டுவிட்டார்கள். அவர்களைத் தவிர யாருமில்லை. இறைவனைச் சந்திக்கத் தயாராகி பெருமானார் (ஸல்) அவர்களின் புர்தாவை (ஆடையைத்) தருமாறு கேட்டு அதனால் தன்னைப் போர்த்திக் கொண்டு கவசத்தையும் அணிந்து கொள்கின்றார்கள். தன் வாளைத் தன்னோடு எடுத்துக் கொண்டு குதிரையின் நடுவே அமர்ந்தவாறு எதிரிகளை நேக்கிப் புறப்பட்டு அவர்களை நோக்கி, "உங்களுக்கு கேடுண்டாகட்டும்! எதற்காக என்னைக் கொல்லப் போகின்றீர்கள்? எந்த உண்மையை (ஹக்கை) விட்டிருக்கின்றேன்? அல்லது ஷரீயாவில் எதனை மாற்றி அமைத்துள்ளேன்? அல்லது சுன்னாவில் எதனை மாற்றியுள்ளேன்?

பதிலுக்கு அவர்கள் கூறியதைப் பாருங்கள்:

'பத்ர் ஹுனைன் (யுத்தங்)களின்போது எம் மூதாதையர்களை உமது தந்தை செய்த(கொன்ற)தற்கான கோபமாகவே உம்மோடு போராட உள்ளோம்' என்றனர். அவர்களது இவ்வாறான ஜாஹிலிய்யத்தான பேச்சைக் கேட்டு இமாம் ஹுஸைன் அழுதார்கள். அதன்பின் அவர்கள் அந்த எதிரிகள்மீது தாக்குதல் தொடுத்தபோது வெட்டுக் கிளிகள் பறந்துபோவது போல் சிதறுண்டு புறமுதுகு காட்டி ஓடினர். அப்போது இமாம் மீண்டும் தான் இருக்கும் மையத்திற்கு வந்து "லாஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹில் அலிய்யுல் அழீம்" எனக் கூறி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள்.

## தம்மை அறிமுகம் செய்யும் இமாம்

இதேவேளை குடிப்பதற்கு ஒரு மிடர் தண்ணீர் தேடியவாறு பின்வரும் கவிதையைப் பாடுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மைநிறை ஹாஷிமி வம்சத்து
அலியின் மகன் நான்
நான் பெருமையடைகையில் கிடைக்கும்
சிறப்பிற்கிது எனக்குப் போதுமானதே !

அண்ணல் அஹ்மதின் (ஸல்) புண்ணிய மகள்
பாத்திமா என் தாயாகும்
அவரோ ஈர் இறக்கையுடையார் எனப்படும்
ஜஃபர் என் சிறிய தந்தையார்

உண்மையான இறைவேதம் எங்கள் மீதே
இறங்கி உள்ளது
எங்கள் வசமே நேர்வழியும், நினைவுகொள்
இறைவேதமும் உள்ளது.

மக்கள் அனைவருக்கும் பாதுகாவலராய்
இறைவன் எம்மை ஆக்கியுள்ளான்
மக்கள் அனைவர்க்கும் நாம் இதனை
இறையருளால் வெளியாக்கி மகிழ்வோம்

ஹவ்ஸின் (கவ்ஸர்) சொந்தக்காரர் நாம்
எம்மைப் பின்பற்றியோர்க்கும்
எம்மைத் தெரியாதோர்க்கும் - அல்லாஹ்வின்
ரஸூலின் பாத்திரத்தினால் நாம்
தண்ணீர் பருகச் செய்வோம்

மஹ்ஷரில் எம்மைத் தொடர்ந்தோர்
சிறப்புமிகு கூட்டமாய் இருப்பர்
எம்மைக் கோபமடையச் செய்தோர்
மறுமையில் நஷ்டமே யடைவர்
எம்மைத் தரிசித்தவர்கள் கலக்கமிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அதின் (எனும் சுவர்க்கம்) இல் என்றுமே தங்கி இருப்பர்.*

*அன்னவர்க்கு சுபசோபனங்கள் !*

இச்சந்தர்ப்பத்தில் இப்னு ஸஅத் இவ்வாறு கூக்கரலிட்டான்:

உங்களுக்குக் கேடுண்டாகட்டும்! யாருடன் போராடுகின்றீர்கள் தெரியுமா? நமது செல்வந்தர்களை வேரோடு பிடுங்கியவரின் மகனோடு. இவர் அறபிகளைக் கொன்றொழித்தவரின் மகன். அவரை வளைத்துத் தாக்குங்கள்" எனக் கூறியதும் அவர்மீது அவர்கள் தாக்குதல் தொடுக்க இமாம் ஹுஸைனும் சினங் கொண்ட சிங்கமாய் தாக்க ஆரம்பித்தார்கள். அவர்களுடன் மோதும் எவரும் வாளுக்கு இரையாகி மடிந்தார்கள். இவ்வாறு பலரை தன்னந்தனியே எதிர்த்துப் போராடி கொன்றொழித்த மாவீரர் இமாம் ஹுஸைன் இவ்வாறு அறிவிப்புக் கொடுத்தார்கள்.

"அபூசுபியானின் பரம்பரையினரே! உங்களுக்கு கைசேதமுண்டாகட்டும்! உங்களிடம் சன்மார்க்கம் இல்லாவிட்டால் மறுமை பற்றிய அச்சமின்றிக் காணப்பட்டால் உங்கள் உலகின் சுதந்தரப் புருஷர்களாக இருங்கள். அறபிகளாக இருந்தால் நீங்கள் திரும்பிச் சென்று உங்களைக் கணக்குப் போட்டுப் பாருங்கள்" என்றார்கள்.

"பாத்திமாவின் மகனே! என்ன சொல்கின்றாய்?" எனக் கேட்டான் ஸிம்ர் என்னும் கொடியோன்.

பதிலுக்கு இமாம் ஹுஸைன் "நான் உங்களோடும் நீங்கள் என்னோடுமே போராடுகின்றீர்கள். பெண்களுக்கு எந்தப் பாதுகாப்பும் கிடையாது. உங்கள் போராளிகளையும் அறிவிலிகளையும் நான் உயிரோடு இருக்கும்வரை(யாவது) என் உறவினர்களை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுங்கள்" என்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸிம்ர் தம் சகாக்களுக்கு "சங்கைக்குரிய அந்த மனிதனின் உறவினர்களை விட்டுத் திரும்பி அவரைக் குறி வையுங்கள்" எனக் கூற அக் கூட்டம் திரும்பி விட்டது.

விண்ணவர்கள் வானிலிருந்து இமாமுக்காக இறங்கினர். அவர்களுக்கு அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை. பின்னர் அங்குமிங்கும் (இமாம்) திரும்பிப் பார்த்த போது தன் நண்பர்கள் எவரையும் காணவில்லை. அவர்களோ நெற்றி மண்ணில் துவண்டவர்களாக, குற்றுயிராக, முனகல் ஒலி எழுப்பியவர்களாகக் காணப்பட்டனர். அவர்களோடு உரையாட முயற்சித்தபோது எவ்வித பதிலும் வரவில்லை.

*குதிரை வீரனே !*
*அபல் பழ்ல் நீவிர் எங்கே?*

*நேற்று வரையும்*
*என்னோடே நின்று தம்*
*இன்னுயிர்களைத் தத்தம் செய்தவர்கள்*
*அன்னவர் எங்கே?*

*நேற்று என்னுடனே*
*இருந்தோர் அனைவருமே*
*இன்று பயணித்து விட்டனர் !*
*என் உள்ளத்தை*
*உவகை கொள்ளச் செய்துவிட்டுச்*
*சென்று விட்டனரே !*

எனச் சப்தமிட்டார்கள்.

தொடர்ந்து உரத்த குரலில், "எனக்கு உதவி செய்வோர் யாருமுண்டா? (ஹல் மின் நாஸிரின் என்ஸுருனீ)

"எனக்கு ஒத்தாசை புரிபவர் யாருமில்லையா? (ஹல் மிம்முஈனின் யுஈனுனீ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளை தன் வாளைக் கூடத் தூக்க சக்தியற்றிருந்த நிலையில் சுகவீனமுற்றிருந்த இமாம் ஸெய்னுலாபிதீன் அவர்கள் வெளியே வந்தார்கள். அன்னை உம்மு குல்தூம் அவரைத் தொடர்ந்து வந்து திரும்பிவருமாறு அழைத்தார்கள்.

## பெண்களிடம் பிரியாவிடை!

அவர்களோ "என் சிறிய தாயே! என்னை விடுங்கள்! றசூலுல்லாஹ்வின் பிள்ளையோடு சேர்ந்து நான் போராடப் போகின்றேன்" எனக் கூறியபோது இமாம் ஹுஸைன், "முஹம்மதின் பரம்பரையிலிருந்து மண்ணகம் வெறுமையாய் இருக்கலாகாது" எனக் கூறி "அவரைப் பிடியுங்கள்" என்றார்கள்.

மற்றோர் அறிவிப்பில்: இமாம் ஹுஸைன் அவர்கள் இவர்களைக் கூடாரத்திற்குக் கூட்டிச் சென்று, "என் மகனே! நீங்கள் செய்வதென்ன?" என வினவ, "தந்தையே! உங்கள் அழைப்பு என் உள்ளத்தின் நரம்பையே துண்டித்து விட்டது. உங்களுக்காக என் உயிரையே அர்ப்பணமாக்கப் போகின்றேன்" என இமாம் ஸெய்னுலாபிதீன் பதில் கூற,

இமாம் ஹுஸைன் அவர்கள், "மகனே! நீங்கள் நோயுற்றிருக்கின்றீர்கள். உங்கள் மீது புனித யுத்தம் கடமையல்ல. நீங்கள் (அல்லாஹ்வின்) அத்தாட்சி; என்னைப் பின்பற்றுவோரின் இமாம்; நீங்கள் இமாம்களின் தலைவர்; அனாதைகளதும் தேவையானவர்களினதும் அரவணைப் பாளர்; எனது உறவினர்களை மதீனாவுக்குக் கூட்டிச் செலபவர்" என்றார்கள் இமாம் அவர்கள்.

இமாம் ஸெய்னுலாபிதீன் இவ்வாறு பதிலளித்தார்கள்:

"தந்தையே உங்கள் போராட்டத்தை நான் பார்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வாளாவிருப்பதா?

"மரணம் என் வாழ்வை அழித்திருக்க வேண்டாமா? என் ஆத்மா தங்களுக்கு அர்ப்பணமாகட்டும். என் உயிர் தங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கட்டும்" என்றார்கள்.

இதன்பின் இமாம் ஹுஸைன் (அலை) அவர்கள் றசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பரிசுத்த உறவினர்கள் வீற்றிருந்த கூடாரம் சென்றதும் "ஸகீனா! பாத்திமா! ஸெய்னப்! உம்முகுல்தூம்!" என அழைத்து "இது உங்களின் இறுதி ஒன்றுகூடல். உங்களைத் திடுக்கிடச் செய்யும் நேரம் நெருங்கி விட்டது. என் ஸலாம், அஸ்ஸலாம்" என அறிவித்தார்கள்.

அப்போது அவர்கள்:

"பிரியாவிடை! பிரியாவிடை!! - அல்-விதா.:., அல்-விதா.:., பிரிவு! பிரிவு!! - அல்-.:.பிராக், அல்-.:.பிராக் என அழுகையும் ஓலமும் ஓங்கி எழுந்தன. அப்போது அன்னாரின் பிரியமிக்க புதல்வி அன்பு ஸகீனா தந்தையைப் பார்த்து, "தந்தையே! மரணத்திற்கு உங்களை நீங்கள் தலைசாய்த்து விட்டீர்களா? அப்போ எனக்கு யார் பொறுப்பு?" எனப் பரிதாபமாகக் கேட்டபோது, "என் கண்மணியே! உதவி புரிபவரோ ஒத்தாசை நல்குபவரோ இல்லாதபோது எப்படி நான் மரணத்திற்கு தலைசாய்க்காதிருக்க முடியும்?" என்றார்கள்.

அப்போது "தந்தையே! எம்மை எமது பாட்டனார் (ஸல்) அவர்கள் வசிக்குமிடம் (மதீனாவில்) கொண்டுவிட மாட்டீர்களா? எனக் கேட்க, "அது முடியாத காரியம் (வெகுதூரம்)" எனக் கூறி சற்று அயர்ந்து உறங்கி விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது ஸகீனா அழுது புலம்பியதால் அவளைத் தன் மார்போடு அரவணைத்து அவளின் கண்ணீரைத் துடைத்தவாறு இமாமின் குரல் உருக்கமாக இவ்வாறு ஒலிக்கின்றது:

"எனக்குப்பின் நீடித்து வாழ் ஸகீனா, உனது அவலக் குரல் எனக்கு மரணத்தை அறிவிக்கின்றது என்பதை நீ அறிந்து கொள்.

"என் உடலில் என் ஆத்மா இருக்கும்வரை உன் கண்ணீரால் என் உள்ளத்தைக் கைசேதமாக்காதே.

"நான் உயிர்ப்பலியாகினால் என்னிடம் வரும் சிறந்த பெண்களில் நீர் முதன்மையானவர் ஸகீனாவே" என்றார்கள் அபாஅப்தில்லாஹில் ஹுஸைன் அவர்கள்.

பின்னர் இமாம் ஹுஸைன் தன் அரவணைப்பின் கீழிருந்த அனைத்துப் பெண்களையும் ஒன்று கூட்டி, சோதனைகளை எதிர்கொள்ளத் தயாராகுங்கள். இறைவன் உங்களைப் பாதுகாத்து உங்களுக்கு உதவி புரிவான். எதிரிகளின் கொடுமைகளிலிருந்து உங்களை விடுதலை செய்வான். உங்களது இறுதி முடிவை சிறப்பாக்குவான். உங்கள் எதிரிகளுக்கு பலவகையான தண்டனைகளைக் கொடுப்பான். இந்த சோதனைகளுக்குப் பதிலாக பல வகையான அருள்களையும் சிறப்புகளையும் உங்களுக்கு வழங்குவான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். உங்களின் முக்கியத்துவம் குறையும் வகையில் உங்கள் நாவுகளினால் சொல்லவோ முறையிடவோ வேண்டாம்."

தொடர்ந்து பெண்களுக்கான தமது அறிவுரையில் இமாம் ஹுஸைன், தம் முந்தானையினால் உடலை நன்கு மூடி மறைத்துக் கொள்ளுமாறு கூற, சகோதரி செய்னப் அது பற்றி விசாரித்தார்கள். "விரைவில் உங்களை அடிமைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களாகவும் போன்று நடாத்துவார்கள். பயணத்தின் போது சிரமங்களைத் ஏற்படுத்துவார்கள்" எனக் கூற ஹஸ்ரத் செய்னப், "பாட்டனாரே, குறைந்த உதவியாளர்களே" எனக் கூக்குரலிட்டவாறு தம் உடையைக் கிழித்தும் தலை முடியைக் குழப்பியும் கன்னத்தில் அடித்தும் கதறிய போது இமாம் ஹு"ஸைன்,

"முர்தழாவின் புதல்வியே! பொறுமை செய்யுங்கள். நிச்சயமாக உம் அழுகை நீண்டு விட்டது" என ஆற்றுப் படுத்திவிட்டு ஹஸ்ரத் ஹு"ஸைன் கூடாரத்தை விட்டு வெளியேற முற்படும்போது அவரைக் கட்டியணைத்து, "சற்றுப் பொறுங்கள் என் சகோதரனே! உங்களைக் கண்ணாரப் பார்த்துக்கொள்ள சற்று காலந் தாழ்த்துங்கள்! நான் உம்மைக் கண்டு கொள்ள இனிமேல் என்னை நீங்கள் சந்திக்கவே மாட்டீர்கள். அப்படியாயின் நான் உங்களுக்குப் பிரியாவிடை கொடுக்கின்றேன்" எனக் கூறி, சோகமே உருவாக அழுதார் செய்னப் அம்மையார்.

இமாமின் கைகால்கள் என அவர் முத்தமிடுகின்றார். பெண்களும் கைகால்களை முத்தமிட்டவாறு தமது உள்ளத்திலுள்ள மனப் பாரத்தை சற்றே குறைத்துக் கொள்கின்றனர். அவர்களை எல்லாம் இமாம் ஹு"ஸைன் அமைதிப்படுத்தி கூடாரத்திற்குச் செல்லுமாறு கூறி பிரியாவிடை கொடுக்கின்றார்கள்.

பின்னர் தன் சகோதரி ஹஸ்ரத் செய்னப் குப்ராவை அழைத்து பொறுமை காக்குமாறும் அன்னாரின் நெஞ்சத்தில் கைவைத்து ஏக்கத்திலிருந்து அவரை ஆற்றுப்படுத்தினார்கள். அத்தோடு பொறுமையாளர்களுக்கு அல்லாஹ் தயார்படுத்தி வைத்துள்ள விடயங்களை நினைவூட்டினார்கள். அப்போது அன்னை செய்னப், இமாம் ஹு"ஸைனைப் பார்த்து "என் தாயின் தவப் புதல்வரே! உள்ளத்தில் உறுதி பூணுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்குளிர்ச்சியாகுங்கள்! நீங்கள் எவ்வாறு விரும்பும் விதத்தில் எம்மைப் பொருந்திக் கொள்ளும் வகையில் நாம் நடந்து கொள்வதைக் காண்பீர்கள்" என்றார் பீபி செய்னப் அவர்கள்.

அப்பொழுது அருமை ஹு"ஸைனார், "என் அன்புச் சகோதரியே! யாருமே விரும்பாத பழைய துணி ஒன்றைத் தாருங்கள். நான் உயிர்ப்பலியாகிய பின் அதனை யாரும் உருவி எடுக்காதிருக்க பழைய துணியைத் தாருங்கள். நிச்சயமாக நான் பறிக்கப்பட்டே கொல்லப்படுவேன்" எனக் கூறியபோது பெண்களில் அழுகைக் குரல் ஓங்கி ஒலித்தது. இறுக்கமான ஆடை ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தபோது "இதுவல்ல. எவருக்குமே உதவாத ஓர் ஆடையைத் தாருங்கள்" எனக் கூறியபோது கிழிந்து போன துணியை எடுத்துக் கிழித்து அதனைத் தன் உள்ளாடையாக அணிந்தார்கள். (இமாமவர்கள் கொலையுண்ட பின் எதிரிகள் அதனையும் உருவி எடுத்தனர்.)

பின்னர் இமாம் "என் குதிரைக்கு முன் வருபவர் யார்?" என அழைத்தார்கள். இதனைச் செவிமடுத்த அன்னை செய்னப் வெளியே வந்து போர்க் குதிரையின் முன் பக்கத்தைப் பிடித்து அதனைத் தடவியவாறு "யாரை அழைத்தீர்? என் உள்ளத்தைக் காயப்படுத்தி விட்டீரே" என்றார்கள்.

## சத்திய சோதனையின் உச்சத்தில்...

எதிரிகள் பக்கம் மீண்டும் சென்ற இமாம் அவர்கள் மீது எதிரிகள் கடுந் தாக்குதலை மேற்கொண்டபோது ஆட்டு மந்தையின் நடுவே ஓநாய் திடீரெனப் பாய்ந்தால் ஆடுகள் எவ்வாறு சிதறுண்டு ஓடுமோ அவ்வாரே ஓட்டம் பிடித்தனர். இந் நிலையில்தான் இமாம் ஹு"ஸைன் இப்படிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகின்றார்கள்.

*இழி(வாக வாழ்வதில்) வில் ஏறிச் சவாரி செய்வதை*
*விட மரணம் சிறந்தது*

*நரகம் செல்வதை விட இழிவாக வாழ்வது*
*உயர்வானதாகும்.*

பின்வருமாறு கூறி இடப்பக்கமாக தாக்குகின்றார்கள்.

*நான்அலீயின் புதல்வர் ஹுஸைன்*

*திரும்பிச் செல்வதில்லை என திடசங்கமாயுள்ளேன்*

*நபியின் மார்க்கத்தின் வழி சென்று என் தந்தையின்*
*குடும்பத்திற்கு ஆதரவளிப்பேன்*

எனக் கூறியதும் அவர்களின் கவசம் சல்லடையாகும்வரை அம்புகளினாலும் ஈட்டிகளினாலும் எதிரிகள் தாக்கினர். களைப்புற்றதால் சற்று நேரம் ஓய்வெடுக்கலானார்கள். அப்போது அன்னாரின் நெற்றியில் ஒரு கல்லெறி விழுந்தது. இதனால் கண்மீது வடிந்த இரத்தத்தை துடைக்க முற்பட்டவேளை மூன்று கூர்களைக் கொண்ட ஓர் அம்பு அன்னாரின் நெஞ்சைத் துளைத்து ஈரலைத் தாக்கி விட்டது. அப்போது இமாம் ஹுஸைன் "பிஸ்மில்லாஹி வபில்லாஹி வபீஸபீலில்லாஹி வஅலா மில்லதி றசூலில்லாஹி" எனக் கூறி விண்ணகத்தை நோக்கி:

"யா அல்லாஹ்! இவர்கள் யாரைக் கொலை செய்கின்றார்கள், இப்பூமியில் இவரைத் தவிர வேறு ஒருவர் நபியின் புதல்வராக இல்லாத ஒருவரை' அல்லவா" என சோகமாகப் பிரார்த்தித்தார்கள்.

பிடரியைத் தாக்கிய ஈட்டியைப் பிடுங்கியபோது இரத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீரிட்டுப் பாய்ந்தது. அதில் தன கரத்தை வைத்தபோது கரம் உதிரத்தால் வடிய அதனை விண்ணகம் நோக்கி வீசியபின் காயத்தின்மீது மீண்டும் கையை வைத்தபோது கரம் இரத்தத்தால் வழிந்தோடியது. தலை மற்றும் சிரசுப் பகுதியிலிருந்து உதிரம் கசியத் துவங்கியது அப்போது "இவ்வாறே இரத்தத்தில் துவண்டவனாக றசூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நான் சந்தித்து 'யா றசூலழ்ழாஹ்! இன்னார் இன்னார்தான் என்னைக் கொன்றனர்' எனக் கூறவேண்டும்" என்றார்கள் ஏந்தல் ஹுஸைன் அவர்கள்.

இந் நிலையில ஸாலிஹ் இப்னு வஹப் என்பவன் அன்னாரின் இடுப்பில் வெட்டி விட்டான். அப்போது வலப்புறமாக குதிரையிலிருந்து சாய்ந்தவாறு, "பிஸ்மில்லாஹி வபில்லாஹி வபீஸபீலில்லாஹி வஅலாமில்லதி றசூலில்லாஹி" எனக் கூறி தலையணை போன்று மணலைக் குவித்து அதில் தன் கன்னத்தை வைத்து. "என் இரட்சகனே! உனது விதியிலும் உனது சோதனையிலும் நான் பொறுமையாய் இருக்கின்றேன். இரட்சகனே! வணங்கி வழிபட உன்னைத் தவிர எந்த இரட்சகனும் இல்லை" என்றனர்.

பின்னர் எழும்பிப் போராட முயற்சித்தும் முடியவில்லை கடுமையாக அழுதவர்களாக, "வா ஜத்தாஹ், வா முஹம்மதா, வா அபதாஹ், வா அலீய்யா, வா உர்பதா, வா கில்லத நாஸிரா (றசூலுல்ழாஹ்வே, முஹம்மது நபியே, தந்தையே, அலீயே, பரதேசியே, குறைந்த உதவியாளர் களே)" எனக் கவலை ததும்ப அழைத்தார்கள்.

"என் பாட்டனார் முஹம்மதே முஸ்தபாவாக இருந்தும் நான் அநீதி இழைக்கப்பட்டவனாகக் கொல்லப்படுகின்றேன். என் தந்தை அலீ முர்தழாவாக இருந்தும் நான் தாகத்தோடு உயிர்ப் பலியாகின்றேன். என் தாய் பாத்திமது ஸஹ்றாவாக இருந்தும் நான் சங்கையின்றி புறக்கணிக்கப்பட்டுள்ளேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என தன் றப்பை அழைத்துப் பிரார்த்தித்தார்கள்.

பின்னர் கூடாரத்திலிருந்து வெளியாகிய ஹஸ்ரத் செய்னப் அவர்கள் "என் சகோதரனே! தலைவரே! அஹ்லுல்பைத்தே" எனப் புலம்பி அழுதவர்களாக "வானம் பூமியை மூடிக் கொள்ள வேண்டாமா, மலை நிலத்தில் துண்டுகளாகி துகளாகி விட வேண்டாமா, இன்று(தான்) என் பாட்டனார் மரணித்து விட்டார். இன்று என் தாய் மரணமாகி விட்டார்" எனப் பரிதவித்தார்கள்.

பின்னர் "இப்னு ஸஅதே உமக்குக் கேடுண்டாகட்டும்! உன் பார்வைக்கு முன்னால் அபூஅப்தில்லாஹ் (ஹு"ஸைன்) கொள்ளப்படுவதா?" என்றார்கள். இப்னு ஸஅத் பதில் எதுவும் கூறவில்லை. மீண்டும் "உங்களுக்குக் கேடுண்டாகட்டும்! உங்களில் எவரும் முஸ்லிமில்லையா?" என அழைக்க ஹஸ்ரத் செய்னபின் இக் கேள்விகளுக்கு எவரும் பதில் கூறவில்லை.

பின்னர் போர்க்களமிறங்கி நிற்பதும் உட்காருவதுமாக இருந்த அம்மையார் பீபி செய்னப் ஹு"ஸைனிடம் செல்லும்வரை மண்ணைவாரி தலையில் வீசியவாறு ஹு"ஸைனின் உடல் குற்றுயிராயிருக்குமிடம் சென்று அம்மையார் செய்னப்,

நீர்தான் என் சகோதரன் ஹு"ஸைனா?

நீர்தான் என் தாயின் புதல்வரா?

நீர்தான் எம்மைப் பாதுகாத்தவரா?

நீர்தான் எம் எதிர்பார்ப்பா?

எனப் புலம்பி அழ ஆரம்பித்தார்.

ஹு"ஸைன் அவர்கள் எவ்வித பதிலும் கூறல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் அன்னார் குற்றுயிராய் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். அப்போது அம்மையார் செய்னப்:

"என் சகோதரனே! என் பாட்டனாரின் பொருட்டால் என்னோடு பேசுங்கள். என் தந்தை அமீருல் மு.்.மினீனின் அந்தஸ்தால் என்னோடு பேசுங்கள்.

"என் உயிருக்கு உயிரான தியாகியே! என்னோடு கதையுங்கள். என் உடப்பிறப்பான என் ஆத்மாவே" எனக் கூறியபோது தம் கண்களைத் திறந்தார்கள் இமாம் ஹுஸைன். அப்போது அன்னாருக்குப் பின்னால் செய்னப் அமர்ந்தவாறு தம் மடிமீது அவர்களை வளர்த்தியபோது இமாம் அவர் பக்கம் பார்வையைச் செலுத்தி, "என் சின்ன சகோதரியே! என் உள்ளத்தை உடைத்து விட்டாய். கவலைக்குமேல் கவலையை உண்டு பண்ணி விட்டாய். அல்லாஹ்மீது ஆணையாக நீர் அமைதியாகி நிம்மதியாக வேண்டும்" என்றார்கள்.

அப்போது செய்னப் "துக்கமே, என் தாயின் புதல்வரே! மரணத்திலிருந்து சுகமடையப் போராடிக் கொண்டிருக்கும் உமது இந்நிலையினைக் கண்டு எவ்வாறு நான் அமைதியும் நிம்மதியுமடைவேன். என் உயிர் உம் உயிருக்கு அர்ப்பணமாகட்டும். என் ஆத்மா உமது ஆத்மாவைப் பாதுகாக்கட்டும்" என பரிதாபமாகக் குரல் எழுப்பினார் பீபி செய்னப்.

இந்நிலையில் பெண்களின் அரவணைப்பிலிருந்த அப்தல்லாஹ் இப்னு ஹஸன் எனும் கள்ளங்கபடமற்ற சிறுவர் ஓடிச் சென்று இமாம் ஹுஸைனின் அருகே நின்று கொண்டான். அவனைப் பிடிப்பதற்காக ஹஸ்ரத் செய்னப் முயற்சித்த போது உயிருக்காய்ப் போராடிக் கொண்டிருந்த இமாம் ஹுஸைன் செய்னபை நோக்கி "அவரைப் பிடியுங்கள்" எனக் கூற, அவனோ அதனை ஏற்க மறுத்து, "அல்லாஹ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது ஆணையாக, சிறிய தந்தையை விட்டும் நான் பிரியவே மாட்டேன்" என்றான். அப்போது வெறிபிடித்தவன்போல் காணப்பட்ட அப்ஹர் இப்னு கஅப், ஹுஸைனை நோக்கி வாளுடன் வந்த போது அச்சிறுவன்:

"வம்பனே உனக்கு நாசமுண்டாகட்டும்! என் சிறிய தந்தையையா கொல்லப் போகின்றாய்" எனக் கேட்டபோது அப்ஹர் அவ்விளம் சிறுவனைத் தாக்கிவிட்டான். அவரோ தாக்குப் பிடிக்க முடியாமல் "சிறிய தந்தையே! தகப்பனே!" என அழைத்தார்கள் அவனை அணைத்த இமாம், "உமக்கு நடந்த விடயத்தில் பொறுமை காத்திடு. அதற்காக உமக்கு நற்கூலி வழங்கப்பட்டு ஸாலிஹான உமது முன்னோருடன் நீ இணைந்து கொள்வாய்" என ஆற்றுப்படுத்திய வேளையில் அச்சிறுவனை நோக்கி ஓர் அம்பு வீசப்படுகின்றது. அது அவரின் குரல் வளையைப் பதம் பார்த்து விடுகின்றது. இமாம் ஹுஸைனின் மடியில் வீற்றிருந்த அவ்விடலைப் பிள்ளையின் ஆத்மா பிரிந்துசென்றது.

பின்னர் உமர் இப்னு ஸஅத், "உங்களுக்கு நாசமே! இறங்கிச் சென்று அவரது (ஹுஸைனின்) தலையை துண்டாடுங்கள்" எனக் கூக்குரலிட்டான். அம்ர் இப்னுல் ஹஜ்ஜாஜ் ஹுஸைனைக் கொல்ல அன்னாரை நெருங்கியபோது அவர்களின் கண்களைப் பார்க்கின்றான். பார்த்தபின் பின்னோக்கி நகர்கின்றான். அவனின் பின் நகர்வு பற்றி வினவியபோது "அவர்களது இரு கண்களும் றசூலுழ் ழாஹ் (ஸல்) அவர்களின் கண்களைப் போன்றிருந்தது" என்றான். பின்னர் ஸபஸ் இப்னு றபீய் சென்றபோது அவனது கரங்கள் நடுங்கியது. அச்சத்தால் தன்னிடமிருந்த வாளை வீசிவிட்டான். அதன் பின்னர் என்ன நடக்கின்றது! ஷிம்ர் இப்னு தில்ஜெளஷன் இமாமின் நெஞ்சில் அமர்ந்து.... அவன் செய்த படுமோசச் செயலை என் பேனாவினால் எழுத முடியவில்லை தாயே, முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலையானவர் காலத்தைத் தகர்த்தார்
அது தீனின் தூண் - நேர்வழியின் அடையாளச் சின்னம்

அவர் யார் என அறிந்த பின்பும் அவரைக் கொன்றனர்.

அவரோ -
கிஸாவு (போர்வை)க்குரிய மரணத்திலிருந்து தூரமாகி உயிர் வாழ முடியாது விழுந்த ஐவரில் ஒருவர்.

பூரண ஆடையின்றிய அன்னாரை
குருதியே குளிப்பாட்ட

தூய புழுதியே அவர்களைக் கபனிட்டது.

(நிரந்தர) உறக்கத்தில் துயிலலானார்
மாவீரர் அபாஅபதில்லாஹில் ஹுஸைன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்.

அநியாயக்காரர்கள் மீது அல்ழாஹ்வின் சாபம் உண்டாகட்டும்.

அலா ல.்.னதுழ்ழாஹி அலல் கவ்மிழ் ழாலிமீன்.

முற்றும்.

அஸ்ஸலாமு அலல் ஹுஸைன்
வஅலா அலியிப்னுல் ஹுஸைன்
வஅலா அவ்லாதில் ஹுஸைன்
வஅலா அன்ஸாரில் ஹுஸைன்
வஅலா அஸ்ஹாபில் ஹுஸைன்
வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Zohre-Aussura, Carving on the wood

ISBN 978-955-1289-03-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org